ශ්‍රී ලංකා ත්‍රිපෝෂ ලිමිටඩ්
இலங்கை திரிபோஷ கம்பனி
Sri Lanka Thriposha Ltd.

ත්‍රිපෝෂ
THRIPOSHA
திரிபோஷ
A SRI LANKA FORTIFIED FOOD PROGRAMME OF THE MINISTRY OF HEALTHCARE & NUTRITION

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
Annual Report

2023

உள்ளடக்கம்

பின்னணி 01

வரலாறு 02

எமது நோக்கு 04

எமது செயற்பணி 04

விரிவான பகுப்பாய்வு 05

பெறுமானங்கள் மற்றும் மையப் பகுதிகள் 06

இலக்குகள் 07

தவிசாளரின் ஆசிச் செய்தி 09

நிறுவன ஒழுங்கமைப்பு 10

பணிப்பாளர் சபை 11

நிறுவன முகாமைத்துவம் 13

ஒட்டுமொத்த தயாரிப்பு தரவுகள் 15

திரிபோஷா விநியோக தரவுகள் 16

சாரம்ச கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்ட அறிக்கை 19

இடர் முகாமைத்துவம் 20

முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகள் 23

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 24

மூலோபாயங்கள் 25

பின்னிணைப்புகள்

- ★ பங்குதாரர் பகுப்பாய்வு 27
- ★ 'SWOT' பகுப்பாய்வு 29
- ★ போட்டரின் ஐந்து விதிகள் 30

நன்றி நவிழல் 31

கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த கணக்கு அறிக்கை 32

கணக்காய்வாளரின் அறிக்கை 64

பின்னணி

இலங்கை திரிபோஷ லிமிடட் ("SLTL" அல்லது "கம்பனி") 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒரு அரசாங்க தொழில் முயற்சி நிறுவனமாக 2010 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. "இலங்கையில் ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்குதல்" என்ற முக்கிய நோக்கத்தை அடைவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட இந்த நிறுவனம் ஆரம்பத்தில் "திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம்" என்று அறிமுகப்படுத்தப்பட்டது. திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம் 1973 ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள மனிதாபிமான அமைப்பான CARE நிறுவனத்தின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில்இ இந்த மேலதிக ஊட்டச்சத்து உணவு அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு இலக்கு பயனாளிகளுக்கு விநியோகிப்பதற்கு முன்னர் இலங்கையில் பொதி செய்யப்பட்டது. அதன் ஆரம்பத்திலிருந்து திரிபோஷாவின் முக்கிய மூலப்பொருட்களாக சோளம், சோயா மற்றும் பால் பொருட்கள் என்பன காணப்பட்டன.

சுகாதார அமைச்சு 1976 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறது. மேலும் இதனை நிர்வகிப்பதற்கு இலங்கைப் புகையிலை கம்பனி ("CTC") விலைமனு செயல்முறை மூலம் தெரிவுசெய்யப்பட்டது. 2010 ஆம் ஆண்டில், இந்தத் திட்டம் இலங்கை திரிபோஷா லிமிடெட் (SLTL) என்ற பெயரில் முழு அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனமாக மாற்றப்பட்டு சுகாதார அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் இலங்கை திரிபோஷ நிறுவனம் எக்ஸ்ரூடர் இயந்திரத்தைப் (Extruder) பொருத்தியதன் மூலம் தயாரிக்கப்பட்ட மேலதிக உற்பத்தி "சுபோஷா" ("Suposha") என முத்திரையைப் பொறித்து தனது வணிகத் தயாரிப்பை சந்தைக்கு அறிமுகப்படுத்த முடிந்தது.

2020 ஆம் ஆண்டில், இலங்கை திரிபோஷ கம்பனியின் நிரல் அமைச்சாக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டது. அதன் பின்னர் இலக்கம் 2334/07 மற்றும் 2023.05.30 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் இலங்கை திரிபோஷ கம்பனி நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் நிரல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.

வரலாறு

1973

அமெரிக்காவில் உள்ள மனிதாபிமான அமைப்பான CARE நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில், இந்த மேலதிக ஊட்டச்சத்து உணவு அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, "ICSM" மாவைப் பயன்படுத்தி இலங்கையில் பொதி செய்யப்பட்டது.

1976

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு சுகாதார அமைச்சின் ஒததுழைப்பு வழங்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்தின் நிர்வாகம் "CARE" அமைப்பினால் சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது.

1979

திரிபோஷ நிகழ்ச்சித்திட்டத்தை நிர்வகிப்பதற்கு பொருத்தமான நிறுவனத்தை தெரிவு செய்வதற்கு அமைச்சு டெண்டர்களை அழைத்தது, மேலும் அமைச்சு, CARE அமைப்பு மற்றும் இலங்கை புகையிலை கம்பனிக்கும் இடையிலான முத்தரப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் பின்னர், திரிபோஷ நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் இலங்கை புகையிலை கம்பனிக்கு வழங்கப்பட்டது.

1980

ஜாஎல தொழிற்சாலையில் இரண்டு பிரேட் வகை இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் செய்முறையானது சோளம்-சோயா (CSB) மற்றும் ICSM மாவு ஆகியவற்றின் கலவையாகும்.

1987

CARE நிறுவனம் திரிபோஷா நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து முழுமையாக விலகிக்கொண்டது.

2010

திரிபோஷ நிகழ்ச்சித்திட்டம், கம்பனிகள் சட்டத்தின் கீழ் “இலங்கை திரிபோஷா லிமிடட் (SLTL) என்ற பெயரில் முழுமையாக அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனமாக மாற்றப்பட்டு இலங்கை புகையிலை நிறுவனத்திடம் இருந்து சுகாதார அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம் கையகப்படுத்தப்பட்டது..

2016

பிரேட் எக்ஸ்ட்ருடருக்கு ("Braidy" Extruder) பதிலாக ஆண்டர்சன் ("Anderson") இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. இது இலங்கை திரிபோஷாவின் முழு தேவையையும் பூர்த்தி செய்ய உதவியது..

2017

உற்பத்தியில் மிகையாக காணப்பட்ட திரிபோஷா உற்பத்தி ”சுபோஷா” என்ற வணிகப் பெயரில் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

2023

நியூட்ரி பார் வகை ஊட்டச்சத்து உணவு “சுபோஷ கலோரி பார்” என்ற வணிகப் பொருளாக உள்நாட்டு சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

சுபோஷ கலோரி பாரில் பல பொருட்கள் உள்ளன, அவற்றில் மிகவும் பிரபலமானவை சோளம், சோயா (சுபோஷ பவுடர்), வெண்ணெய், பால் பவுடர், முட்டை, சீனி, விட்டமின்கள், தாதுக்கள் மற்றும் அரிசி. இந்த தானிய அடிப்படையிலான உணவு வழக்கமான தின்பண்டங்களுக்கு ஆரோக்கியமான மாற்றீடாக பிரபலமானது அத்தோடு, பொதுவாக விட்டமின்கள், தாதுக்கள் மற்றும் கல்சியம் போன்ற ஊட்டச்சத்து கூறுகளால் வலுவூட்டப்பட்டுள்ளது. இந்த தானிய அடிப்படையிலான உணவுக்கான வரவேற்பு மற்றும் தேவை இரண்டும் அதிகமாக இருப்பதைக் காணலாம், குறிப்பாக, உலகளாவிய மற்றும் உள்நாட்டு நுகர்வோரின் செலவின சக்தியின் அதிகரிப்புடன் இது மேலும் வளர்ச்சி அடையும்.

சுபோஷ ஒரு ஊட்டச்சத்து நிறைந்த மேலதிக உணவுப் பொருளாகும். இலங்கையின் பொதுச் சந்தையில் “தாங்கிக்கொள்ள முடியுமான ஊட்டச்சத்து” நோக்குநிலையை ஏற்றுக்கொண்ட போதிலும், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கிடையில் புரத ஊட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்யக்கூடிய ஒரு உணவு தயாரிப்பு கூட சந்தையில் இல்லை. எனவே, சுபோஷா கலோரி பார் உற்பத்தியின் முக்கிய நோக்கமானது, பசையம் இல்லாத மற்றும் “குறைந்த விலையில்” அதிக புரோட்டீன் ஊட்டச்சத்து மதிப்பைக் கொண்ட ஆயத்த உணவு தயாரிப்பை ஊக்குவிப்பதாகும்.

சுபோஷ கலரி பார் - அரிசி கலவை

சுபோஷ கலரி பார்

எமது நோக்கு

“புத்தாக்கமும் நிலைபேர்தன்மையையும் கொண்ட வினைத்திறன்மிக்க செயற்பாட்டினால் நாட்டின் போஷாக்கின்மையை ஒழிப்பதற்கு போஷாக்கு மிகுந்த மற்றும் நம்பகமான ஊட்டச்சத்தை வழங்கும் நிறுவனமாக திகழ்தல்”

எமது செயற்பணி

“இலக்கிடப்பட்ட குழுக்களுக்கு உயர் போஷாக்குமிக்க திரிபோஷா உணவை வழங்குவதன் மூலம் உள்நாட்டு விவசாயிடமிருந்து மூலப்பொருட்களை கொள்வனவு செய்து போஷாக்குள்ள மேலதிக உணவு உற்பத்தியை சந்தைக்கு அறிமுகம் செய்து ஆரோக்கியமுள்ள சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதே எமது குறிக்கோளாகும்.”

விரிவான பகுப்பாய்வு

ஆரம்பத்தில் பெறுமானங்கள் அடையாளம் காணப்பட்டன. மேலும் நோக்கு மற்றும் செயற்பணி அவற்றிலிருந்து பெறப்பட்டது.

இலக்குகள் மற்றும் உத்திகள் முறையே இடைவெளி பகுப்பாய்வு (நேர்காணல்கள் மூலம் அடையாளம் காணப்பட்டது) மற்றும் சுற்றுச்சூழல் பகுப்பாய்வு மூலம் சேகரிக்கப்பட்ட உள்ளக மற்றும் வெளிப்புற காரணிகளைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டன.

இடைவெளிகள் முன்னேற்றத்தின் 5 பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த இடைவெளிகள் மற்றும் சுற்றுச்சூழல் பகுப்பாய்வு ஆகியவற்றை கருத்திற்கொண்டு கவனம் செலுத்தும் மையப் பகுதிகள் நிறுவப்பட்டன. இந்த அனைத்து புள்ளிகளிலும் கவனம் செலுத்தி, நோக்கு மற்றும் செயற்பணியை அடைய முறையே இலக்குகள், உத்திகள் மற்றும் செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.



பெறுமானங்கள் மற்றும் முக்கிய துறைகள்

தனது நோக்கு மற்றும் செயற்பணியை அடைந்துகொள்வதற்கு கம்பனியினால் மேற்கொள்ள வேண்டிய பின்வரும் பெறுமானங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இலங்கை திரிபோஷாவின் இலக்குகள் மற்றும் உத்திகளை சீரமைப்பதிலும், இறுதியில் அதன் நோக்கை அடைவதிலும் கவனம் செலுத்த வேண்டிய நான்கு (4) பகுதிகள் அடையாளம் காணப்பட்டன.

எமது அர்ப்பணம்

தன்னிறைவு அடையும் அதே வேளையில் நாட்டில் ஊட்டச்சத்து குறைபாட்டை ஒழிப்பதில் கவனம் செலுத்துதல்

பங்குதாரர் மதிப்பை அதிகப்படுத்துதல்.

எமது செயற்பாடுகள்

தடையின்றி செயல்படும் போது ஊட்டச்சத்து உணவுப் பொருட்களின் நிலையான ஆதாரம், பதப்படுத்துதல், சந்தைப்படுத்துதல் மற்றும் விநியோகம் ஆகியவற்றில் கவனம் செலுத்துதல்.

எமது தயாரிப்பு

இறுதி வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் பொருட்களின் தரம் மற்றும் தரத்தில் கவனம் செலுத்துதல்.

எமது மக்கள்

எங்களின் மிகவும் மதிப்புமிக்க சொத்தான ஊழியர்கள் மீது கவனம் செலுத்துகிறோம்,

இலக்குகள்

இலங்கை திரிபோஷ கவனம் செலுத்த வேண்டிய துறைகளில் வெற்றிபெற என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதலை வழங்க இலக்குகள் நிறுவப்பட்டுள்ளன. இது நிறுவனத்தின் உத்திகள் மற்றும் செயல்திட்டத்தை பிரதிபலிக்கும்.

எமது அர்ப்பணம்

இல	இலக்கு	விபரம்
இலக்கு 1	எங்கள் பங்குதாரர்களின் சமூக நலனோம்பல் நோக்கங்களை அடைதல்	சமூகத்திற்கு நிறுவனத்தின் பங்களிப்பை மேம்படுத்தும் நோக்கில் பணியாற்றுதல்

எமது செயற்பாடுகள்

இல	இலக்கு	விபரம்
இலக்கு 2	உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை பராமரித்தல்	உற்பத்தி ஆலை, களஞ்சியப்படுத்தல், தளபாடங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கும் செலவுகளைக் குறைப்பதற்கும் பங்குதாரர் மதிப்பை அதிகரிக்கவும் புதிய தீர்வுகளைக் கண்டறிதல்.
இலக்கு 3	உற்பத்தித்திறனை அதிகரிக்க செயல்பாட்டு சிறப்பை அடைதல்.	தேசத்திற்கு நல்ல ஊட்டச்சத்தை வழங்குவதற்கு பயனுள்ள செயல்பாட்டு முகாமை மூலம் நிலையான வணிக சூழலை உருவாக்குதல்.

எமது தயாரிப்பு

இல	இலக்கு	விபரம்
இலக்கு 4	ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு மூலம் தயாரிப்பு சிறப்பை அடைதல்	புத்தாக்க மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி மூலம் சரியான தயாரிப்புகளை வழங்குதல்.

எமது மக்கள்

இல	இலக்கு	விபரம்
இலக்கு 5	நிறுவன கற்றல் மற்றும் நேர்மறையான பணிச்சூழலை மேம்படுத்துதல் மற்றும் ஊக்குவிப்பு	ஒரு கற்றல் கலாச்சாரத்தை உருவாக்குவதன் மூலம் பணியாளர் முன்னேற்றம் மற்றும் மேம்பாட்டில் கவனம் செலுத்துதல், அங்கு ஊழியர்களும் அவர்களது தொழில் தருநர்கள் தங்கள் சொந்த மற்றும் நிறுவனத்தின் வளர்ச்சியை வெளிப்படையாக அங்கீகரிக்கவும் மதிக்கவும் கவனம் செலுத்தல்.

தவிசாளரின் ஆசிச்செய்தி

2011 ஆம் ஆண்டில், இலங்கை திரிபோஷ கம்பனி சுகாதார அமைச்சுடன் இணைந்த முழுமையான அரசாங்க நிறுவனமாக கூட்டிணைக்கப்பட்டது. அதன் பிரதான நோக்கமான ஆரோக்கியமுள்ள சமூகத்தைக் கட்டியெழுப்பும் பணி காணப்படுகின்றது. அந்த வகையில் இலங்கையிலுள்ள அனைத்து கர்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 05 வயதிற்குட்பட்ட எடை குறைந்த குழந்தைகளுக்கு இலவசமாக சுகாதார சிகிச்சை மையங்கள் ஊடாக திரிபோஷா மேலதிக உணவு வழங்கப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் அந்த இலக்கு அடையப்பெற்றுள்ளது.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ், 2023 இல் இலங்கை திரிபோஷா கம்பனி குறிப்பாக மூலப்பொருள் கிடைப்புத் தன்மைக்கு ஏற்ப (WFP நிறுவனம் மற்றும் SAGT நிறுவகத்தால்) உற்பத்தி நடவடிக்கைகளுக்கு குறைந்த அளவு வளங்கள் மாத்திரமே பயன்படுத்துகின்றது. 2023 ஆம் ஆண்டில் மொத்த உற்பத்தியான 9,163 மில்லியன் தொன்களை தாண்டுவதற்கு இயலுமாகியது.

2023 ஆம் ஆண்டின் மொத்த வருமானம் ரூ.5,486.74 மில்லியன் மற்றும் மொத்தச் செலவு ரூ.4,675.65 மில்லியன் ஆகும். அதன்படி, வரிக்கு முன்னைய இலாபம் ரூ.811.09 மில்லியன் ஆகும்.

இந்த ஆண்டு நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்ததற்காக 87.64 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதுடன், 65 மில்லியன் ரூபாவை 2023 ஆம் ஆண்டு இடைக்கால பங்கிலாபத் தொகையாக திறைசேரிக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. அத்தோடு, 2023 ஆம் ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளின்படி, குறைந்தபட்சம் 30% பங்கிலாபமாக 2024 நிதியாண்டு முடிவதற்குள் வரிக்குப் பிந்திய இலாபத்தில் இருந்து பங்கிலாப தொகையாக நிதி அமைச்சுக்கு வழங்கப்படும் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

இதற்காக எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள், சுகாதார அமைச்சர் கலாநிதி கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் செயலாளர் எஸ். ஜனக ஸ்ரீ சந்திரகுப்த, நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் திறைசேரியின் செயலாளர் கௌரவ. திரு. எம். மஹிந்த சிறிவர்தன அவர்களுக்கும், எமது பணிப்பாளர் சபைக்கும், முழு ஊழியர் படைக்கும், தொடர்ச்சியான உற்பத்திக்கான மூலப்பொருட்களை வழங்கும் எமது விநியோகஸ்தர்களுக்கும், எமக்கு சகல வழிகளிலும் உறுதுணையாக இருக்கும் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தீப்தி குலரத்ன
தவிசாளர்
இலங்கா திரிபோஷ கம்பனி

நிறுவன ஒழுங்கமைப்பு



- Acc.Offi - கணக்கீட்டு உத்தியோகத்தர்
- AO - நிர்வாக உத்தியோகத்தர்
- Dist - விநியோக உத்தியோகத்தர்
- FO - நிதி உத்தியோகத்தர்
- IA - உள்ளக கணக்காய்வாளர்
- Mgt Assis - முகாமைத்துவ உதவியாளர்
- Pur - கொள்வனவு உத்தியோகத்தர்
- Prod - தயாரிப்பு உத்தியோகத்தர்
- WH - களஞ்சியசாலை உத்தியோகத்தர்

பணிப்பாளர்கள் சபை

தவிசாளர்
திரு. தீப்தி குலரத்ன

வைத். அசேல குணவர்தன
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்
சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

வைத். திருமதி சித்திரமாலி டி சில்வா
பெண்கள் மற்றும் சிறுவர் பணியகம்
சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

திருமதி. சமிலா கருணாதிலக்க
பணிப்பாளர்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

வைத். திருமதி தேஜா ஹேரத்
சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்

திருமதி லக்மினி என். மாகொடரத்ன போஷாக்கு ஒருங்கிணைப்பு பிரிவு
சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

திரு. சதுர்னிக கேசங்க பெரேரா
சட்டத்தரணி – சட்ட ஆலோசகர்

திரு. சுதத் கருணாரத்ன பிரதம
நிதி அலுவலர் I
சுகாதார அமைச்சு
(அவதானிப்பாளர்)

திருமதி. தனூஜா பிரியதர்ஷனி
அல்விஸ்
பணிப்பாளர் சபை செயலாளர்

திரு. சம்பிக சல்காது
சிரேட்ட முகாமையாளர்
(செயற்படுத்தல்)

திருமதி. தனூஜா பிரியதர்ஷனி அல்விஸ்
சிரேட்ட முகாமையாளர்
(மனிதவளம் மற்றும் சட்டம்)

திரு. பி.ஜீ.பி.கே. தசநாயக்க
தயாரிப்பு மற்றும் பொறியியல் முகாமையாளர்

திரு. டி.பீ. தரிந்து சாமிக்க
நிதி முகாமையாளர்

திரு. அஜித் நிஸ்ஸங்க
சந்தைப்படுத்தல் முகாமையாளர்

திரு. அஜித் திஸ்ஸாநாயக்க
தரக் கட்டுப்பாட்டு
முகாமையாளர்

திருமதி. நெலும் மெண்டிஸ்
தர உத்தவாத
முகாமையாளர்

வருடம்	2019	2020	2021	2022	2023
திரிபோஷ உற்பத்தி மெற்றிக் தொன் (MT)	11,712	5,988	5,568	1,582	7,342
திரிபோஷ உற்பத்தி மெற்றிக் தொன் (MT)	3,717	1,939	2,890	1,170	1,821
மொத்த உற்பத்தி (MT)	**15,429**	**7,927**	**8,458**	**2,752**	**9,163**

2019 முதல் 2023 வரையிலான ஒட்டுமொத்த உற்பத்தி



திரிபோஷ விநியோக தகவல்கள்

பிரதேச சுகாதார பணிப்பாளர் பணிமனைகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள்	தாய்மார் (கர்ப்பிணி மற்றும் பாலூட்டும்)	பிள்ளைகள்			மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை
		06 மாதங்களுக்கு குறைந்த மற்றும் 03 வருடங்கள்	03 - 05 வருடங்களுக்கு இடைப்பட்ட		
			பொது	மார்பக சிகிச்சை	
அம்பாறை	**4,557**	6,399	6,435	150	**17,541**
அனுராதபுரம்	**13,725**	21,250	18,390	135	**53,500**
பதுளை	**11,430**	16,103	14,880	255	**42,668**
மட்டக்களப்பு	**11,485**	11,536	9,525	180	**32,726**
கொழும்பு மாநகர சபை	**5,670**	5,115	3,990	-	**14,775**
கொழும்பு	**17,685**	16,862	18,345	-	**52,892**
காலி	**13,545**	14,752	13,590	300	**42,187**
கம்பஹா	**28,890**	26,472	18,000	-	**73,362**
ஹம்பாந்தோட்டை	**9,300**	13,508	13,830	75	**36,713**
யாழ்ப்பாணம்	**8,898**	7,323	6,735	270	**23,226**
கல்முனை	**10,180**	7,660	7,395	150	**25,385**
களுத்துறை	**10,815**	11,816	7,395	375	**30,401**
கண்டி	**23,672**	26,307	24,945	270	**75,194**
கேகாலை	**12,825**	10,871	11,415	210	**35,321**
கிளிநொச்சி	**2,236**	1,946	1,440	30	**5,652**
குருநாகல்	**26,442**	27,198	24,645	225	**78,510**
மன்னார்	**2,322**	1,645	1,665	30	**5,662**
மாத்தளை	**8,134**	8,747	8,715	150	**25,746**
மாத்தறை	**11,160**	17,224	17,625	150	**46,159**
மொனராகலை	**9,861**	10,257	8,955	60	**29,133**
முல்லைத்தீவு	**1,920**	1,672	1,890	30	**5,512**
நுவரெலியா	**10,680**	35,775	27,075	180	**73,710**
பொலன்னறுவை	**7,530**	9,036	8,565	60	**25,191**
புத்தளம்	**13,846**	10,303	8,820	30	**32,999**
இரத்தினபுரி	**12,735**	20,907	17,355	255	**51,252**
திருகோணமலை	**8,829**	8,527	6,930	90	**24,376**
வவுனியா	**2,791**	2,557	2,145	60	**7,553**
தேசிய சுகாதார அகாடமி – களுத்துறை / பேருவளை	**4,170**	5,102	4,425	-	**13,697**
மார்பு மருத்துவமனை	**-**	-	-	1,680	**1,680**
லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனை	**-**	-	105	-	**105**
அபேக்ஷா மருத்துவமனை – மகரகம	**-**	-	30	-	**30**
அயதி மையம் - ராகம	**-**	-	30	-	**30**
மார்பு மருத்துவமனை - வெலிசறை	**-**	-	120	-	**120**
மொத்தம்	**305,333**	**356,870**	**315,405**	**5,400**	**983,008**

* 2023 ஆம் ஆண்டில் கர்ப்பிணி / பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 03 – 05 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளுக்கு மாத்திரம் திரிபோஷா வழங்கப்பட்டது.

* அதற்கமைய மொத்த திரிபோஷ பயனாளிகளின் எண்ணிக்கை – 626,138 ஆகும்.

பிரதேச சுகாதார பணிப்பாளர் பணிமனைகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள்	மொத்த பளனாளிகளின் எண்ணிக்கை 2023	2023 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட திரிபோஷ மாஸ்டர் பொதிகள்
அம்பாறை	11,142	5,191
அனுராதபுரம்	32,250	12,249
பதுளை	26,565	15,425
மட்டக்களப்பு	21,190	11,292
கொழும்பு மாநகர சபை	9,660	7,046
கொழும்பு	36,030	20,560
காலி	27,435	12,139
கம்பஹா	46,890	26,231
ஹம்பாந்தோட்டை	23,205	13,036
யாழ்ப்பாணம்	15,903	8,462
கல்முனை	17,725	9,446
களுத்துறை	18,585	10,348
கண்டி	48,887	19,517
கேகாலை	24,450	10,868
கிளிநொச்சி	3,706	2,221
குருநாகல்	51,312	20,511
மன்னார்	4,017	2,410
மாத்தளை	16,999	9,054
மாத்தறை	28,935	15,398
மொனராகலை	18,876	8,802
முல்லைத்தீவு	3,840	1,834
நுவரெலியா	37,935	19,794
பொலன்னறுவை	16,155	7,608
புத்தளம்	22,696	13,884
இரத்தினபுரி	30,345	15,926
திருகோணமலை	15,849	8,450
வவுனியா	4,996	2,993
தேசிய சுகாதார அகாடமி – களுத்துறை / பேருவளை	8,595	3,448
மார்பு மருத்துவமனை	1,680	1,000
லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனை	105	70
அபேக்ஷா மருத்துவமனை – மகரகம	30	12
அயதி மையம் - ராகம	30	12
மார்பு மருத்துவமனை - வெலிசரை	120	53
மொத்தம்	**626,138**	**315,290**

மாதம்	**திரிபோஷ (மாஸ்டர் பொதிகள்) விநியோகம் 2023**
ஜனவரி	27,705
பெப்ரவரி	28,049
மார்ச்	20,728
ஏப்ரல்	364
மே	14,088
ஜுன்	29,989
ஜுலை	30,978
ஆகஸ்ட்	21,814
செப்டம்பர்	40,684
ஒக்டோபர்	46,815
நவம்பர்	29,495
டிசம்பர்	24,581
மொத்தம்	**315,290**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஏனையவர்கள் கூட்டங்கில் கலந்துகொள்ளல்

i. திருமதி. சமிலா கருணாதிலக்க	- தலைவர், கணக்காய்வு மற்றும் முகாதைத்துவக் குழு பணிப்பாளர், இலங்கை திரிபோஷ கம்பனி
ii. வைத். திருமதி சித்திரமாலி டி சில்வா	- உறுப்பினர், கணக்காய்வு மற்றும் முகாதைத்துவக் குழு பணிப்பாளர், இலங்கை திரிபோஷ கம்பனி
iii. வைத். திருமதி தேஜா ஹேரத்	- உறுப்பினர், கணக்காய்வு மற்றும் முகாதைத்துவக் குழு பணிப்பாளர், இலங்கை திரிபோஷ கம்பனி
iv. திரு. பீ.ஜீ. தர்ஷன	-அவதானிப்பாளர், கணக்காய்வு மற்றும் முகாதைத்துவக் குழு, கணக்காய்வு அத்தியட்சகர், தேசிய கணக்காய்வு அலுவலகம்.
v. திருமதி. தனூஜா பிரியதர்ஷனி அல்விஸ்	- சிரேஷ்ட முகாமையாளர், (மனிதவளம் மற்றும் சட்டம்) இலங்கை திரிபோஷ கம்பனி
vi. திரு. டி.பீ. தரிந்து சாமிக்க	- நிதி முகாமையாளர், இலங்கை திரிபோஷ கம்பனி
vii. திரு. எல்.ஜே. சரத் பிரேமசந்திர	- ஏற்பாட்டாளர் - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு, உள்ளக கணக்காய்வாளர், இலங்கை திரிபோஷ கம்பனி

2023 ஆம் ஆண்டில் பின்வரும் திகதிகளில் 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

01 முதலாவது கூட்டம் 2023 ஜுலை 04 ஆம் திகதி

02 இரண்டாவது கூட்டம் 2023 ஒக்டோபர் 19 ஆம் திகதி

03 மூன்றாவது கூட்டம் 2023 நவம்பர் 28 ஆம் திகதி

கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள் :

01 2019 ஆம் ஆண்டின் நிலைய சொத்துக்களின் மீள்மதிப்பு பெறுமதியை மீளமைத்தல்.

02 2022 ஆம் ஆண்டு கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட விடயங்கள்

03 பங்கிலாபம் செலுத்துவதற்குரிய விடயங்கள்

04 பயன்பாட்டுக்கு உதவாதப் பொருட்களை நீக்கும் நடைமுறை

உணவு உற்பத்தித் துறையுடன் ஒரு வலுவான உறவைக் கொண்ட ஒரு அமைப்பாக, நிறுவனம் நிச்சயமாக பெறுமதியை உருவாக்கும் திறனில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வெளிப்புற மற்றும் உள்ளக அபாயங்களின் வரம்பிற்கு உட்பட்டுள்ளது. நிறுவனத்தின் இடர் முகாமைத்துவ செயல்முறை வணிகம் தொடர்பான அபாயங்களைக் குறைப்பதற்கும் பங்குதாரர் பெறுமதி உருவாக்கத்தை அதிகரிப்பதற்கும் இடையே உகந்த சமநிலையை உருவாக்குகின்றது. இடர் முகாமைத்துவம் என்பது ஒரு நிறுவன அளவிலான ஒழுங்குமுறையாகும். இது தெளிவாக வரையறுக்கப்பட்ட கட்டுப்பாட்டு கட்டமைப்புகள், கொள்கை கட்டமைப்புகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றைக் கண்டறிந்து, நிர்வகிப்பதற்கு மற்றும் அபாயங்களைக் குறைப்பதற்கு நிலையான முறையில் பயன்படுத்துகின்றது.

இடர் கட்டுப்பாடு

நிறுவனத்தின் இடர் சுயவிவரத்தை திறம்பட நிர்வகிப்பதற்கான இறுதிப் பொறுப்பை பணிப்பாளர் சபை ஏற்றுக்கொள்கின்றது. கணக்காய்வுக் குழு அதன் இடர் தொடர்பான மேற்பார்வைக் கடமைகளில் பணிப்பாளர் சபைக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது. நிதி அபாயங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர், வாடிக்கையாளர் மற்றும் சுற்றுச்சூழல் துறைகள் தொடர்பான இடர்களைக் கண்டறிதல், கண்காணித்தல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றில் முன்னணிப் பாத்திரத்தை வகிக்கின்றது. நிதியல்லாத அபாயங்கள் முதன்மையாக வணிக அலகு / செயற்பாட்டு மட்டத்தில் எழுகின்றன. மேலும் நிறுவனம் முழுவதும் உள்ள இடர்களை முன்கூட்டியே கண்டறிந்து கண்காணிப்பதற்கு ஊழியர்கள் பொறுப்பாவார்கள்.



இடர் முகாமைக்கான கொள்கைகள் மற்றும் அணுகுமுறைகள்

நிறுவனம், அதன் அபாயங்களை நிர்வகிப்பதிலும் அளவிடுவதிலும் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாதுகாப்பு மாதிரிகளைப் பின்பற்றுகின்றது. இடர் முகாமைத்துவம், இடரை அடையாளம் காணல், இடர் மதிப்பீடு, இடர் தணிப்பு, இடர்களை அறிக்கை செய்தல் மற்றும் கண்காணிப்பு ஆகிய பணிகள் தெளிவாக பிரிக்கப்பட்டிருப்பதை இது உறுதி செய்கின்றது.



- இடர்களை அடையாளம் காணுதல் : அனைத்து பணியாளர்களினதும் பங்கேற்புடன் அனைத்து வர்த்தக அலகுகள் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் ஊடாக அபாயகரமான செயல்திறனைக் கண்டறிதல்.
- இடர் கணிப்பு : நிகழ்தகவு மற்றும் பாதிப்பின் அளவு அளவின் மீது , இடர் மதிப்பீடு செய்யப்படும்.
- இடர் தணிப்பு : இடரை பயனுள்ள வகையில் தணிப்பதற்கு செயல் , திட்டங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் , செயற்படுத்தல்.
- இடர் கண்காணிப்பு/அறிக்கையிடல் : முக்கிய இடர் குறிகாட்டிகள் குறித்து கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கையிடல் மற்றும் தொடர்ச்சியான அடிப்படையின் மீது பிரதான செயற்பாடுகளை கண்காணித்தல்.

இடர் விருப்பம் மற்றும் சகிப்புத்தன்மை

இடர் விருப்பம் மற்றும் சகிப்புத்தன்மை மூலம் வணிகத் திட்டமிடல், வள ஒதுக்கீடு மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவம் மற்றும் இடர் முகாமைத்துவம் ஒருங்கிணைக்கப்படுவதால் எமது இடர் முகாமைத்துவ செயல்முறைக்கு இது இன்றியமையாதது. நிறுவனம், கம்பனி அதன் இலக்குகள் மற்றும் நோக்கங்களைப் பின்தொடர்வதில் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கும் அபாயத்தின் வரம்பு, இடர் சகிப்புத்தன்மை நிலை மூலம் குறிப்பிடப்படுகின்றது.

குறைந்த இடர்	நடுத்தர இடர்	கூடிய இடர்
இடர் தீர்வு: ஏற்றுக்கொள்ளக்கூடியது இது நாளாந்த நடைமுறைகள் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது மற்றும் குறிப்பிட்ட வளங்களுக்கான தேவை இல்லை. **இடர் பதிலளிப்பு**	**இடர் தீர்வு: ஏற்றுக்கொள்ளல் மற்றும் கண்காணித்தல்** செயற்பாட்டு முகாமையாளர்கள் மூலம் கட்டியெழுப்பப்பட்டு கண்காணிக்கப்படும் தீர்வுத் திட்டங்கள் **இடர் பதிலளிப்பு** விசேட கண்காணிப்பு மற்றும் பதிலளிப்பு நடைமுறைகள் ஊடாக நிர்வகித்தல்	**இடர் தீர்வு: இடர் பதிலளிப்பை தவிர்த்தல்** சிரேஷ்ட முகாமைத்துவத்தின் கவனம் தேவை. மற்றும் முகாமைத்துவ பொறுப்பு குறிப்பிடப்பட்டுள்ளது.

முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகள்

KPI என்பது ஒரு முக்கிய செயல்திறன் குறிகாட்டியின் சுருக்கமான வடிவமாகும். இது ஒரு குறிப்பிட்ட இலக்கு அல்லது நோக்கத்தை நோக்கிய முன்னேற்றத்தைக் கண்காணிக்கப் பயன்படுத்தப்படும் அளவிடக்கூடிய மற்றும் கணிப்பிடக்கூடிய அளவீடு ஆகும். இந்த KPI குறிகாட்டிகள் நிறுவனங்கள் தங்கள் பலம் மற்றும் பலவீனங்களை அடையாளம் காணவும், தரவு சார்ந்த முடிவுகளை எடுக்கவும் மற்றும் செயல்திறனை மேம்படுத்தவும் உதவுகின்றன.

இந்த முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் தனிப்பட்ட பணிக்குழுக்கள் மையப்படுத்தப்பட வேண்டிய இலக்குகள் மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு நிறுவன அளவிலான முடிவெடுப்பதற்கு வழிகாட்ட உதவும் நுண்ணறிவு கண்காணிப்பு முறையாகும். முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளைக் கண்காணிப்பதன் மூலம், நிறுவனங்கள் தங்கள் வலிமை மற்றும் பலவீனத்தை அடையாளம் கண்டு, தரவு சார்ந்த முடிவுகளை எடுக்கவும் செயல்திறனை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்க முடியும்..

குறிகாட்டிகள்	வருடங்கள்		
	2021	**2022**	**2023**
தயாரிப்பு திட்ட அடைவ (மொத்த தயாரிப்பு மெற்றிக் தொன்)	8,171	2,752	9,163
விற்பனை வளர்ச்சி = (தற்போதைய மொத்த விற்பனை – முன்னைய கால மொத்த விற்பகைள்)	2.81%	26.73%	265.67%
மொத்த இலாப எல்லை = (வருமானம் - COGS) / வருமானம்	10.86%	3.16%	16.44%
நிகர இலாப எல்லை வரிக்கு முன் = (மொத்த வருமானம் - மொத்தச் செலவினம் வருமான வரி இன்றி) / மொத்த வருமானம்	6.36%	(5.07%)	15.19%
தொழிற்பாட்டு மூலதனம் = தற்போதுள்ள சொத்துக்கள் - தற்போதுள்ள பொறுப்புக்கள் (ரூ.மில்)	786.29	876.94	1,197.86

குறிப்பிட்ட இலக்குகளுடன் தொடர்புடைய பிற அளவுசார் நிதி மற்றும் நிதி அல்லாத முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் நிறுவனத்தின் நிறுவனத் திட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

SLTL உடன் தொடர்புடைய முக்கிய பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் (SDGs)

SDG 2

பட்டினியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்தல் நிலையான விவசாயத்தை ஊக்குவித்தல்.

SDG 9

உறுதியான உள்கட்டமைப்பை உருவாக்குதல், உள்ளக மற்றும் நிலையான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புத்தாக்கங்களை விருத்தி செய்தல்.

SDG 12

நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல்

இலங்கை திரிபோஷ நிறுவனத்தின் இலக்குகள் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுடன் இணைந்திருப்பதை உறுதி செய்வதற்காக, முன்மொழியப்பட்ட இலக்குகளுடன் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளும் திட்டமிடப்பட்டன.

முக்கிய துறைகள்	இலக்குகள்	பே.அ.இ.
எமது அர்ப்பணம்	எங்கள் பங்குதாரர்களின் சமூக நல நோக்கங்களை அடைந்துகொள்ளல்	2
எமது செயற்படுத்தல்	உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை பராமரித்தல்	9, 12
	உற்பத்தித்திறனை அதிகரிக்க செயற்பாட்டு சிறப்பை அடைதல்	
எமது தயாரிப்பு	ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தின் மூலம் தயாரிப்பு சிறப்பை அடைதல்	-
எமது மக்கள்	நிறுவன கற்றல் மற்றும் நேர்மறையான பணிச்சூழலை மேம்படுத்துதல் மற்றும் விருத்திசெய்தல்	-

மூலோபாயங்கள்

இலங்கை திரிபோஷ நிறுவனத்தின் தொலைநோக்குப் பார்வையை எவ்வாறு அடைவது என்பதற்கான வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் அதன் இலக்குகளை அடைவதற்கு மேலும் உதவும் வகையில் மூலோபாயங்கள் உருவாக்கப்பட்டன.

	இலக்கு 1 | நமது பங்குதாரர்களின் சமூக நல நோக்கங்களை அடைவதற்கான மூலோபாயங்கள்
1.1	நலன்புரி உற்பத்தியின் தொடர்ச்சியாக வழங்குவதை உறுதி செய்தல்
1.2	சமூக வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குதல்

	இலக்கு 2 | உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை நிலைநிறுத்துவதற்கான மூலோபாயங்கள்
2.1	களஞ்சிய திறன் மற்றும் பிற தொடர்புடைய வசதிகளை மேம்படுத்துதல்
2.2	நம்பகத்தன்மை மற்றும் செயல்திறனை அதிகரிக்க தற்போதுள்ள உற்பத்தி உட்கட்டமைப்பை மேம்படுத்தல்
2.3	தொழிற்சாலைக்குள் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்
2.4	தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்

	இலக்கு 3 | உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான செயற்பாட்டு சிறப்பை அடைவதற்கான மூலோபாங்கள்
3.1	உள்ளக வர்த்தக செயல்முறைகளை நெறிப்படுத்துதல்
3.2	சந்தை அணுகல் மற்றும் தயாரிப்பு கிடைக்கும் தன்மையை மேம்படுத்துதல்
3.3	நேர்மறையான பணிச்சூழலை உறுதிப்படுத்த தரம் மற்றும் பாதுகாப்பு நியமங்களை கடைபிடித்தல்
3.4	தயாரிப்புகளுக்கான விளம்பர ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
3.5	அரசின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்தல்

	இலக்கு 4 | ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு மூலம் தயாரிப்பு சிறப்பை அடைவதற்கான மூலோபாயங்கள்
4.1	தயாரிப்பு அபிவிருத்தி மற்றும் தரப் பரிசோதனைக்கு வசதியாக வளங்களை மேம்படுத்துதல்
4.2	நிறுவனம் வழங்கும் தயாரிப்புகளை அந்தந்த இலக்கு சந்தைகளுக்கு அறிமுகப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல்

	இலக்கு 5 | நிறுவன கற்றல் மற்றும் நேர்மறையான பணிச்சூழல் மூலோபாயங்களை மேம்படுத்தல் மற்றும் விருத்திசெய்தல்
5.1	ஆட்சேர்ப்பு மற்றும் தொடர் திட்டமிடல் செயல்முறையை மேம்படுத்துதல்
5.2	திறமையான பயிற்சி திட்டங்கள் மூலம் தனிப்பட்ட அபிவிருத்தியை ஊக்குவித்தல்
5.3	ஒரு விரிவான செயல்திறன் முகாமைத்துவ அமைப்பை நிறுவுதல்

பங்குதாரர் பகுப்பாய்வு

பங்குதாரர் பகுப்பாய்வு என்பது அவர்களின் சக்தி மற்றும் ஆர்வத்திற்கு ஏற்ப தொடர்புடைய பங்குதாரர்களை அடையாளம் கண்டு பகுப்பாய்வு செய்வதற்கான ஒரு முறையாகும். அதிக ஆற்றல் கொண்ட மற்றும் அதிக ஆர்வமுள்ள பங்குதாரர்கள் முக்கிய வீரர்களாக மாறுகிறார்கள். குறைந்த சக்தி மற்றும் குறைந்த ஆற்றல் என்பன குறைவாகவே அவசியப்படுகின்றன.



இலங்கை பாராளுமன்றம், திறைசேரி, சுகாதார அமைச்சு மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான இராஜாங்க அமைச்சு ஆகியன இலங்கை திரிபோஷ நிறுவனத்தில் அதிக அதிகாரத்தையும் ஆர்வத்தையும் கொண்டுள்ளன. தொழிலில் உள்ள மற்றவர்கள் உட்பட இந்த பங்குதாரர்கள் நெருக்கமாக கண்காணிக்கப்படல் வேண்டும்.

- மூலப்பொருள் வழங்குநர்கள், இலங்கை புகையிரதத் திணைக்களம், நிதி அமைச்சு, பொது தொழில் முயற்சிகள் திணைக்களம் மற்றும் இலங்கை டெலிகொம் கம்பனி ஆகியவை இலங்கை திரிபோஷ நிறுவனத்தில் அதிக ஆற்றல் கொண்ட மற்றும் ஒப்பீட்டளவில் குறைந்த ஆர்வமுள்ள பங்குதாரர்களாகும். இந்த பங்குதாரர்களுக்கு அதிக அதிகாரம் இருப்பதனால் அவர்களின் ஆர்வம் அவ்வளவு அதிகமாக இல்லாத போதிலும் இலங்கை திரிபோஷ நிறுவனம் அவர்களை திருப்திப்படுத்தும் வகையில் செயல்பட வேண்டும்.

- சுகாதார வைத்திய அதிகாரிகள், தாய் சேய் சுகாதார வைத்திய அதிகாரிகள், பயனாளிகள், போட்டியாளர்கள், விவசாயிகள் ஆகியோர் இலங்கை திரிபோஷ நிறுவனத்தின் செயற்பாடுகளில் குறைந்த சக்தி மற்றும் அதிக ஆர்வம் கொண்ட சில பங்குதாரர்கள் ஆவர். இலங்கை திரிபோஷ நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்தும் இந்த பங்குதாரர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

பங்குதாரர்கள் பற்றிய சுருக்கப் பெயர் பட்டியல்	
AG	கணக்காய்வாளர் நாயகம்
BOC	இலங்கை வங்கி
CEA	மத்திய சுற்றாடல் அதிகாரசபை
CEB	இலங்கை மின்சார சபை
CPC	இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
DMS	முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
GMOA	அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம்
GoSL	இலங்கை அரசாங்கம்
GT	பொது தொழில் முயற்சி
IRD	இறைவரித் திணைக்களம்
MoA	கமத்தொழில் அமைச்சு
MoF	நிதி அமைச்சு
MOH	சுகாதார மருத்துவ அதிகாரி
MOMCH	கர்ப்பிணித் தாய் மற்றும் சேய் மருத்துவ அதிகாரி
MT	நவீன வணிகம்
PED	பொது தொழில் முயற்சிகள் திணைக்களம்
RDHS	சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர்
SLR	இலங்கைப் புகையிரத திணைக்களம்
SLSI	இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவனம்

SWOT பகுப்பாய்வு

இலங்கை திரிபோஷ நிறுவனத்தின் செயற்பாட்டுச் சூழலை மேலும் புரிந்து கொள்வதற்காக, 'SWOT' பகுப்பாய்வு நடத்தப்பட்டது. இது அதன் உள்ளக பலம் மற்றும் பலவீனங்கள் மற்றும் அதன் வெளிப்புற வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களை அடையாளம் காண செய்யப்படும் ஒரு ஆய்வு ஆகும்.

பலங்கள்

- வலுவான வரத்தகப் பெயர்
- தொழில்துறையில் அனுபவம் மற்றும் நிபுணத்துவம்
- அரசு உரிமை மற்றும் ஒத்துழைப்பு
- வேலை வாய்ப்பு உருவாக்கம்
- உள்நாட்டு விவசாயிக்கு அதிகாரமளித்தல்
- வங்கிக் கடன்கள் இல்லை
- ஒன்றிணைந்த ஆளுகை
- வேலை பாதுகாப்பு மற்றும் பணியாளர் திருப்தி
- அதிகரித்த உற்பத்தி திறன்
- பிற அரசு நிறுவனங்களின் ஒத்துழைப்பு சேவைகள்
- சுய நிலைத்தன்மை
- வர்த்தகப் பெயர்களுக்கான முதன்மை பெயர் மூலம் வலுவான விம்பம் உருவாக்கம்

பலவீனங்கள்

- திரிபோஷ விநியோகத்தில் திறமையின்மை
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வசதிகள் இல்லாமை
- போதிய சேமிப்பு இடம் இல்லை
- உற்பத்தி நிறுத்தங்களுக்கான காப்புப் பிரதி திட்டம் இல்லாமை
- தயாரிப்பு நிறுத்தங்கள்
- தயாரிப்பு திறமையின்மை
- ஒரு ஒருங்கிணைந்த அமைப்பு தீர்வு இல்லாமை
- விரிவாக்க நிதி பற்றாக்குறை
- தரமான தரங்களுக்கு அங்கீகாரம் இல்லாமை
- மனித வள முகாமை தொடர்பான சிக்கல்கள்
- நிலையான இயக்க நடைமுறைகள் மற்றும் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் இல்லாமை
- பாதுகாப்பு இருப்புக்களை கட்டுதல் மற்றும் பராமரித்தல் இல்லாமை
- நிறுவனத்தின் நோக்கு அறிக்கையை மாற்றுதல்
- நேரடி ஏற்றுமதி பற்றாக்குறை
- வர்த்தகப் பெயர் விழிப்புணர்வு இல்லாமை
- விரிவாக்கத்திற்கான நிதி பற்றாக்குறை
- பாதுகாப்பு பங்கு கட்டிடம் இல்லாமை

SWOT

அச்சுறுத்தல்கள்

- வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான வழங்குநர்கள்
- அரசாங்க கொள்கை மாற்றங்கள்
- வழங்குநர்களின் இணக்கமின்மை
- எதிர்பாராத காலநிலை மாற்றம்
- நேரடி மற்றும் மறைமுக மாற்று தயாரிப்புகளிலிருந்து கடுமையான போட்டி
- போட்டியிடும் பொருட்களுடன் விலை வேறுபாடு
- அதிகரித்த தெரிவுநிலை மற்றும் போட்டியாளர்களின் சந்தைப்படுத்தல் முயற்சிகள்
- உண்ணத் தயாராக இருக்கும் தானியப் பொருட்களால் ஏற்படும் அச்சுறுத்தல்
- போட்டியாளர்களின் பன்முகப்படுத்தப்பட்ட தயாரிப்பு வகைகள்
- நேரடி மற்றும் மறைமுக மாற்று தயாரிப்புகளிலிருந்து நேரடி போட்டி

வாய்ப்புக்கள்

- சாத்தியமான உள்கட்டமைப்பு மேம்பாடு
- தரமான தரங்களுக்கு அங்கீகாரம் பெறல்
- ஒருங்கிணைந்த கணினி தீர்வு
- தன்னியக்க சாத்தியங்கள்
- புதிய தயாரிப்பு மேம்பாடு
- மாவுக்கு மாற்றாக "சுபோஷா" சந்தைப்படுத்தல்
- சந்தை விரிவாக்க சாத்தியங்கள்
- விளம்பரங்களைத் தொகுத்தல்

போட்டரின் ஐந்து விதிகள்

இலங்கை திரிபோஷா நிறுவனம் ”திரிபோஷா” எனும் நலன்புரி உற்பத்தியை உற்பத்தி செய்கின்றது, இது இலக்கு பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது. அத்தோடு, ”சுபோஷா” எனப்படும் மறுபெயரிடப்பட்ட வணிக தயாரிப்பை முதன்மையாக விநியோகஸ்தர் வலையமைப்பினூடாக பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. எனவே, இலங்கை திரிபோஷ கம்பனியின் இலாபகரமான வர்த்தகப் பிரிவாக அது காணப்படுவதனால் இந்த பகுப்பாய்வு முக்கியமாக “சுபோஷ” தயாரிப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

உயர்

பதிலீடுகளின் அச்சுறுத்தல்

- சந்தையில் பரந்த அளவிலான தானிய அடிப்படையிலான பொருட்கள் கிடைத்தல்
- இலங்கை திரிபோஷ நிறுவனம் அதன் போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் ஒரே ஒரு தயாரிப்பு மட்டுமே உற்பத்தி செய்கிறது
- காலை உணவுக்கு பல மாற்று பொருட்கள் கிடைக்கும்
- சந்தையில் குறைந்த விலையில் மாற்றுப் பொருட்கள் கிடைத்தல்
- இலங்கையின் பிரதான உணவாக அரிசி உள்ளது

குறைந்த

புதிய பிரவேசங்களின் அச்சுறுத்தல்

- தன்னலக்குழு
- அதிக மூலதனத் தேவைகள்
- பொருளாதாரங்களின் அளவு
- வாடிக்கையாளர் பிராண்ட் விசுவாசம்
- போட்டியாளரின் வலுவான நிலையைப் பேணுதல்
- குறிப்பிட்ட மாநில சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் இல்லாமை



உயர்

வழங்குநரின் சக்தி

- சோளம் மற்றும் சோயாவிற்கு மாற்றீடுகள் இல்லாமை
- விவசாயப் பொருட்கள் முக்கிய மூலப்பொருளாக உள்ளது
- கணிக்க முடியாத வானிலை முறைகள் விநியோகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன
- பால் பவுடரின் ஒரே வழங்குநர், செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படும் எண்ணெய்யின் ஒரே வழங்குநர்
- உற்பத்தி செயல்முறைக்கு குறிப்பிட்ட உதிரி பாகங்களின் தேவை

நடுத்தர்

கொள்வனவாளரின் சக்தி

- திரிபோஷாவிற்கு வாங்குபவர் சக்தி இல்லாமை
- தன்னலக்குழு காரணமாக வேறுபடுத்தப்படாத தயாரிப்புகளின் குறைந்த மாறுதல் செலவுகள்
- நவீன வணிக வாடிக்கையாளர்களை மேம்படுத்துதல்

எல்லோரையும் ஊக்குவித்து தேவையான அறிவுறுத்தல்களையும் அனுசரணையையும் வழங்கியமை தொடர்பில் சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் மாண்புமிகு கலாநிதி கெஹலிய ரம்புக்வெல்ல அவர்கள், எமக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கிய அமைச்சின் செயலாளர்களான திரு. எஸ். ஜனக ஸ்ரீ சந்திரகுப்த அவர்களுக்கும் மற்றும் வருடம் தோறும் தேவையான ஒதுக்கீடுகளை எமக்கு வழங்கிய நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பொது திறைசேரியின் செயலாளர் திரு. மஹிந்த சிறிவர்தன அவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேபோன்று நிறுவனத்தின் முகாமைத்துவத்தில் அங்கம் வகித்த பணிப்பாளர் சபையின் அனைவரிடமிருந்தும் கிடைத்த ஒத்துழைப்பு எம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது. அத்துடன் எமது வழங்குநர்கள் உட்பட வெளிவாரியாக எமக்குச் சேவை வழங்கும் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

எமது நிறுவனத்தில் மேலிருந்து கீழும் கீழிருந்து மேலும் உள்ள பதவிகளில் திருப்திகரமாக சேவைபுரியும் பதவியணியொன்று காணக்கூடியதாகவுள்ளமை பெருமகிழ்ச்சியாகும். நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அவர்கள் வழங்கும் பங்களிப்பு மெச்சப்படுதல் வேண்டும். இறுதியாக திரிபோஷ நிறுவனத்திற்கென கட்டியெழுப்பப்பட்ட நற்பெயரைப் பாதுகாத்து எந்நேரமும் உழைக்கும் வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோஷ கம்பனியின் மொத்த பதவியினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கை திரிபோஷ லிமிடட்
விஸ்தீரண வருமான மற்றும் செலவினக் கூற்று
2023 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	குறிப்புகள்	31/12/2023 ரூபா சதம்	31/12/2022 ரூபா சதம்
வருமானம்			
வருவாய்	02	5,340,097,463	1,460,376,665
கழிப்பனவு : நுகர்வுக்கு தயார் நிலையிலுள்ள	03	(4,434,494,806)	(1,397,887,498)
: விற்பனை செலவினம்	04	(27,747,095)	(16,306,385)
தேறிய வருமானம் / (நட்டம்)		877,855,562	46,182,781
வேறு வருமானம்	05	146,643,079	59,784,117
கழிப்பனவு (செலவினங்கள்)			
விற்பனை மற்றும் விநியோக செலவு	06	43,803,343	13,000,652
நிர்வாகச் செலவுகள்	07	89,310,178	95,195,285
நிதி மற்றும் வேறு செலவினம்	08	80,294,424	71,816,385
		213,407,945	180,012,321
வரிக்கு முன்னரான நிகர இலாபம்		811,090,697	(74,045,423)
2023 ஆம் ஆண்டுக்கான வருமான வரி	09	(255,684,180)	25,735,350
வரிக்குப் பின்னரான நிகர இலாபம் (நட்டம்)		**555,406,517**	**(48,310,073)**

இந்த நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதி ஒன்றினை உருவாக்கும் 06 தொடக்கம் 30 வரையிலான பக்கங்களில் தோன்றும் இந் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுடன் இணைந்து மேற்போந்த முழுமொத்த வருமானக் கூற்றானது வாசிக்கப்படவுள்ளது

இலங்கை திரிபோஷ லிமிடட்
நிதி நிலமைக் கூற்று
2023 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று

	குறிப்புகள்	31/12/2023 ரூபா சதம்	31/12/2022 ரூபா சதம்
சொத்துக்கள்			
நடைமுறை சாராத சொத்துக்கள்			
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்	14	1,104,816,486	1,105,798,640
ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்கள்		15,385,245	35,888,296
கிடைக்கவுள்ள கடன்	15	49,743,321	-
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்பு பொருட்கள்	16	952,274,033	458,657,846
வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்	17	347,217,913	182,545,806
காசும் காசுக்குச் சமமானவைகளும்	18	868,353,209	513,773,838
		2,167,845,155	1,154,977,490
மொத்தச் சொத்துக்கள்		**3,337,790,207**	**2,296,664,426**
பங்குரிமையும் பொறுப்புக்களும்			
மூலதனம் மற்றும் ஒதுக்குகள்			
வெளிப்படுத்தப்பட்ட மூலதனம்	19	304,600,000	304,600,000
மூலதன ஒதுக்குகள்	20	407,750,516	407,750,516
மீள் விலைமதிப்பு ஒதுக்குகள்	21	518,157,038	518,157,038
தடுத்துவைத்த உழைப்புக்கள்		1,064,046,112	605,989,851
மொத்த பங்குரிமை		**2,294,553,666**	**1,836,497,405**
நடைமுறை சாராத பொறுப்புக்கள்			
ஓய்வூதிய நன்மைக் கடப்பாடு	22	72,942,409	79,162,809
மருத்துவ நிதியம்	23	314,226	435,786
		73,256,635	**79,598,595**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
பிற்போடப்பட்ட வருமானம்	24	552,426,677	102,540,269
வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகள்	25	417,553,229	278,028,157
மொத்த பங்குரிமையும் பொறுப்புக்களும்		**3,337,790,207**	**2,296,664,426**

இந் நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதி ஒன்றினை உருவாக்கும் 06 தொடக்கம் 30 வரையிலான பக்கங்களில் தோன்றும் இந் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுடன் இணைந்து மேற்போந்த நிதி நிலமைக் கூற்றானது வாசிக்கப்படவுள்ளது

இந் நிதி நிலமைக் கூற்றுக்களானவை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத் தேவைப்பாடுகளுக்கு ஒத்திசைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதித் தலைவர்

இந் நிதி நிலமைக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னளிப்பிற்கு பணிப்பாளர் சபையே பொறுப்பாகும்.

சபைக்காகவும் சபையின் சார்பிலும் அங்கீகரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டது

தவிசாளர் **பணிப்பாளர்**

ஜா எல, கப்புவத்த

திகதி: 22/03/2024

இலங்கை திரிபோஷ லிமிடட்
பங்குரிமை மாற்றக் கூற்று
2023 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	குறிப்பு	வெளிப்படுத்தப்பட்ட மூலதனம்	மூலதன ஒதுக்குகள்	மீள் விலைமதிப்பு ஒதுக்குகள்	தடுத்துவைத்த உழைப்புக்கள்	மொத்தம்
		ரூபா சதம்	ரூபா சதம்	ரூபா சதம்	ரூபா சதம்	ரூபா சதம்
2022.01.01 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி		304,600,000	407,750,516	511,096,168	656,621,192	1,880,067,876
சேர்ப்பனவு / கழிப்பனவு - 2022		-	-	7,060,870	-	7,060,870
பங்கிலாபம்		-	-	-	(20,000,000)	(20,000,000)
முன்னைய சீராக்கம்	26	-	-	-	17,678,732	17,678,732
வரிக்குப் பின்னரான நிகர இலாபம் (நட்டம்) 2022		-	-	-	(48,310,073)	(48,310,073)
2022.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி		**304,600,000**	**407,750,516**	**518,157,038**	**605,989,851**	**1,836,497,405**
2023.01.01 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி		304,600,000	407,750,516	518,157,038	605,989,851	1,836,497,405
பங்கிலாபம்		-	-		(65,000,000)	(65,000,000)
முன்னைய சீராக்கம்	26	-	-	-	(32,350,255)	(32,350,255)
வரிக்குப் பின் நிகர இலாபம் (நட்டம்) - 2023		-	-	-	555,406,517	555,406,517
2023.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி		**304,600,000**	**407,750,516**	**518,157,038**	**1,064,046,112**	**2,294,553,666**

இலங்கை திரிபோஷ லிமிடட்

காசுப் பாய்ச்சற் கூற்று

2023 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	31/12/2023 ரூபா.	31/12/2022 ரூபா.
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வரிக்கு முன்னரான நிகர இலாபம் / (நட்டம்)	811,090,697	(74,045,423)
சீராக்கங்கள்		
தேய்மானம்	89,048,731	64,146,588
வட்டி வருமானம்	(77,331,884)	(37,893,166)
ஆண்டுக்கான பணிக்கொடை ஏற்பாடு	4,647,286	3,716,378
மருத்துவப் பங்களிப்புக்கான ஏற்பாடு	208,740	221,340
முன்னைய ஆண்டு சீராக்கங்கள்	(32,350,255)	9,276,426
	(15,777,381)	**39,467,566**
தொழிற்படு மூலதனத்திற்கான மாற்றங்களின் முன்னரான தொழிற்பாட்டு இலாபம்	795,313,315	(34,577,856)
தொழிற்படு மூலதனத்திலான மாற்றங்கள்		
வியாபார கடன்படுனர் மற்றும் ஏனைய வருமதிகளிலான அதிகரிப்பு /	(214,415,428)	(64,678,090)
வியாபார மற்றும் ஏனைய சென்மதிகளிலான அதிகரிப்பு /(குறைவு)	(97,599,203)	(16,587,406)
இருப்புக்களில் அதிகரிப்பு /(குறைவு)	(493,616,188)	(143,914,304)
பிற்போடப்பட்ட வருமானம் அதிகரிப்பு /(குறைவு)	449,886,408	102,540,269
	(355,744,411)	**(122,639,530)**
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசு உருவாக்கம்	439,568,905	(157,217,386)
கழிப்பனவு (செலுத்தப்பட்ட பணிக்கொடை)	(5,561,625)	(3,244,400)
செலுத்தப்பட்ட வருமான வரி	(3,362,916)	-
செலுத்தப்பட்ட மருத்துவ நன்மைக் கொடுப்பனவு	(330,300)	(219,499)
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	**430,314,063**	**(160,681,285)**
முதலீட்டுச் செயற்பாடுகள்		
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கையகப்படுத்தல்	(88,066,577)	(7,243,936)
குறுகியகால முதலீடுகள்	56,398,621	(46,180,196)
கிடைக்கப்பெற்ற வட்டி	77,331,884	12,360,657
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	**45,663,929**	**(41,063,476)**
நிதிச் செயற்பாடுகள்		
பங்கிலாபம் செலுத்தல்	(65,000,000)	(10,000,000)
நிதி நடவடிக்கைகளின் காசுப் பாய்ச்சல்	(65,000,000)	(10,000,000)
காசும் காசுக்குச் சமமான விடயங்களிலான நிகர அதிகரிப்பு / (குறைவு	410,977,992	(211,744,761)
வருட ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமமான விடயங்களும்	128,744,869	340,489,630
முன் கெகாண்டு காசும் காசுக்குச் சமமான விடயங்களும்	**539,722,861**	**128,744,869**
நிதி நிலமைக் கூற்றில் காட்டப்பட்ட காசும் காசுக்குச் சமமான விடயங்களின் பகுப்பாய்வு		
இலங்கை வங்கி - ஜா எல -71324617	258,291,873	76,633,346
இலங்கை வங்கி - ஜா எல - 80306903	281,410,988	52,111,523
சில்லறைக் காசு	20,000	-
	539,722,861	**128,744,869**

இலங்கை திரிபோஷ லிமிடட்

உற்பத்திக் கணக்கு

2023 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	குறிப்பு	31/12/2023 ரூபா சதம்	31/12/2022 ரூபா சதம்
உற்பத்திச் செலவு			
மூலப் பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்கள்			
2023.01.01 ஆம் திகதி மீதி		285,782,578	172,340,457
கொள்வனவு	10	2,209,374,406	1,185,651,849
பிரதான மூலப் பொருட்கள்	11	2,158,666,344	103,437,269
		4,653,823,328	1,461,429,576
வர்த்தக கணக்கிற்கு மாற்றம்		-	(20,493,000)
பலவீனமடைதல்		(25,801)	-
2023.12.31 ஆம் திகதி மீதி		(788,779,970)	(285,782,578)
நுகர்வு மூலப்பொருட்களின் செலவு		**3,865,017,556**	**1,155,153,998**
நேரடி உழைப்புச் செலவு மற்றும் முகாமைத்துவசெலவு	12	238,380,892	192,173,910
ஆரம்பச் செலவு		**4,103,398,449**	**1,347,327,907**
தொழிற்சாலை தலைக்குரிய செலவு	13	363,978,602	122,322,279
		4,467,377,051	**1,469,650,186**
நடைபெறும் வேலை			
2023.01.01 ஆம் திகதி மீதி		36,129,610	15,072,093
2023.12.31 ஆம் திகதி மீதி	16	(15,161,890)	(36,129,610)
		20,967,720	**(21,057,518)**
மொத்த உற்பத்திச் செலவு		**4,488,344,771**	**1,448,592,669**

இலங்கை திரிபோஷ லிமிடட்
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்
2023 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

1. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1.1 அறிக்கையிடும் நிறுவனம்

வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோஷா லிமிடட் நிறுவனம் முழுமையாக அரசுடமையான கம்பனி ஒன்றாக (அரசாங்க தொழில் முயற்சி ஒன்றாக) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு தாபிக்கப்பட்ட சுகாதார அமைச்சின் (நிரல் அமைச்சின்) மேற்பார்வையின் கீழ் இயங்கிவரும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட (2007 இலக்கம் 07 எனும் கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் PB – 3873 இன் கீழ் இயங்கிவரும்) ஒரு கம்பனியாகும்.

கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் பிரதான வியாபாரத் தளமும் த.பெ. இல. 17, கப்புவத்தை, ஜா எல, இலங்கை என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

1.1.2 பிரதான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாட்டுத் தன்மை

சுகாதார அமைச்சின் "திரிபோஷ விநியோக நிகழ்ச்சித் திட்டம்" சார்பில் "திரிபோஷ" உற்பத்தி செய்யும் ஒரே கம்பனி இந்தக் கம்பனியாகும்.

கம்பனியின் ஏனைய பிரதான செயற்பாடுகள் பின்வருவனவாகும்:

- இலங்கையில் தாய், சேய் போசாக்கின்மையைக் குறைக்கும் பொருட்டு இலங்கையின் ஊட்டச்சத்துமிக்க குறைநிரப்பு உணவு உற்பத்தியான "திரிபோஷ" வினது மேம்பாடு, உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கு உதவுதல்.
- திரிபோஷ உற்பத்திக்கான மூலப் பொருட்களை வழங்கும் உள்நாட்டு விவசாயிகளின் வருமான பிறப்பாக்க வழியினை ஊக்கப்படுத்தல்.
- அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் வேறு ஏதேனும் வடிவத்திலான ஊட்டச்சத்துமிக்க கலக்கப்பட்ட உணவுப் பொருட்களுக்கு நிலவும் சந்தை வாய்ப்பை குறைத்தல்.
- திரிபோஷவின் வருடாந்த தேவைப்பாட்டினை மதிப்பிடுதல் மற்றும் வழங்கல் செய்வதற்கு தேவையான நடவடிக்கையினை எடுத்தல்.

1.1.3 பணிப்பாளர் சபை

1. திரு. தீப்தி குலரத்ன (தவிசாளர்)
2. வைத்தியக் கலாநிதி திரு. அசேல குணவர்தன
3. கலாநிதி. திருமதி லக்மினி என். மாகொடரத்ன
4. திருமதி எச்.எம். தேஜா ஹேரத்
5. திரு. சதுர்னிக கேசங்க பெரேரா
6. கலாநிதி சித்திரமாலி டி சில்வா
7. திருமதி. சமிலா கருணாதிலக்க (திறைசேரியின் பிரதிநிதி)

கண்காணிப்பாளர்கள்

1. திருமதி. டி.சி. விக்கிரமசேன சுதத் கருணாரத்ன (பிரதம நிதி அலுவலர் - சுகாதார அமைச்சு)

சபைச் செயலாளர்

திருமதி. தனுஜா பிரியதர்ஷனி அல்விஸ்

1.1.3 கணக்காய்வாளர்

தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இல 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

1.1.4 வங்கியாளர்கள்

இலங்கை வங்கி,
ஜா எல

1.1.5 வெளியீட்டிற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி

2023 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோஷா கம்பனியின் நிதிக்கூற்றுக்களை பணிப்பாளர் சபையின் தீர்மானத்துக்கிணங்க வெளியீட்டிற்காக அதிகாரமளிக்கப்பட்டது.

1.1.7 தயாரிப்பிற்கான அடிப்படை

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் தரங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களினால் உருவாக்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய

தயாரிக்கப்பட்டுள்ளன. சாதாரணப் பெறுமதியின் மீது அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தவிர்ந்த வரலாற்றுச் செலவினத்தின் ஒப்புதலின் கீழ் இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்காக சில தீர்க்கமான கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரிக்க வேண்டி உள்ளது. கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி அவற்றைப் பயன்படுத்தும் செயன்முறையின் போது முகாமைத்துவம் தனது தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது. உயர் மட்டத்திலான தீர்மானம் அவசியப்படுகின்ற அல்லது சிக்கல் நிலைமை உருவாகும் துறைகள் அல்லது கம்பனியின் நிதிக் கூற்றுக்களுக்கு எடுகோள்கள் மற்றும் மதிப்பீடுகள் முக்கியத்துவம் பெறுகின்ற துறைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

(அ) ஒத்திசைவுக் கூற்று

வருமானக் கூற்று, முழுமொத்த வருமான மற்றும் செலவினக் கூற்று, நிதி நிலைமைக் கூற்று, உரிமை முதலிலான மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சற் கூற்று ஆகியவற்றினை உள்ளடக்கும் நிதிக் கூற்றுக்களானவை கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகளுடன் சேர்த்து ("நிதிக் கூற்றுக்கள்") இலங்கை பட்டயக் கணக்காளர் சங்கத்தினால் வெளியிடப்பட்டவாறான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத் தேவைப்பாட்டுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) அளவீட்டிற்கான அடிப்படை

உரிய குறிப்புகளின் கீழ் உண்மைப் பெறுமதி குறித்து பொருத்தமான வெளிப்படுத்தல்கள் செய்யப்படும் இடங்கள் தவிர வரலாற்றுக் கிரய அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(இ) ஒப்பீட்டுத் தகவல்கள்

நிகழ்கால நிதிக் கூற்றுக்களின் புரிந்துகொள்ளலை முன்னேற்றும் பொருட்டும் இடைக்கால ஒப்பீட்டுத் தன்மையினை மேம்படுத்தும் பொருட்டும் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட சகல தொகைகளுக்குமான முன்னைய காலப்பகுதி தொடர்பில் ஒப்புநோக்கப்பட்ட தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கீழே விதித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளானவை, வேறு வகையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தாலொழிய இந் நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்ட சகல காலப்பகுதிக்கும் ஒரே மாதிரியாகவே பிரயோகிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்களின் முன்னளிப்பு அல்லது விடய உருப்படிகளின் வகைப்பாடானது திருத்தப்பட்டிருக்கும் பொழுது சிறந்த முன்னளிப்பினை வழங்கும் பொருட்டு நிகழ்கால ஆண்டுடன் ஒத்திசைவதற்கென ஒப்பீட்டுத் தொகைகளும் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஈ) நாணயத் தொழிற்பாடும் முன்னளிப்பும்

இக் கம்பனியின் நாணயத் தொழிற்பாடும் முன்னளிப்புமாகவுள்ள இலங்கை ரூபாவில் நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

(உ) அடிப்படை மதிப்பீடுகள் மற்றும் முக்கியமான தீர்வுகளைப் பயன்படுத்தல்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒத்திசைவாக நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பும் முன்வைப்பும் ஆனது கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தினையும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் ஆகியவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் பாதிக்கும் தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பவற்றைச் செய்வதற்கு முகாமையினைத் தேவைப்படுத்துகின்றது. உண்மையான பெறுபேறுகள் இந்த மதிப்பீடுகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட முடிவுகள் என்பற்றை விட வித்தியாசப்படக்கூடும்.

மதிப்பீடுகள் மற்றும் கீழுள்ள எடுகோள்கள் என்பன தொடர்ந்து செல்லும் ஓர் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்களானவை, அத் திருத்தமானது குறித்த காலப்பகுதியினை மாத்திரம் பாதித்தால் இம் மதிப்பீடானது திருத்தப்படும் காலப்பகுதியில் அல்லது திருத்தக் காலப்பகுதியிலும் அத்துடன் அத் திருத்தமானது நிகழ்காலப்பகுதியினையும் எதிர்காலப்பகுதியினையும் பாதித்தால் எதிர்காலத்திலும் இனங்காணப்பட்டுள்ளன.

(ஊ) நடைமுறைப்படுத்தப்படும் வர்த்தக நிலமை

எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வர்த்தக நடவடிக்கை என்ற ரீதியில் கம்பனியை தொடர்ந்தும் பேணுவதற்கு அதற்குள்ள ஆற்றல் தொடர்பில் பணிப்பாளர் சபை மதிப்பீடொன்றை செய்துள்ளது. தனது செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு தேவையான அளவு வளங்கள் கம்பனியிடம் உள்ளதாக சபை திருப்தியடைந்துள்ளது. அதற்கிணங்க, கம்பனியை செயற்பாட்டு நிலமையில் பேணும் உத்தேசத்துடன் எதிர்காலத்தில் தொடர்ந்தும் பேணிவருவதற்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

1.2 சொத்துக்களும் அவற்றின் விலைமதிப்பு அடிப்படைகளும்

1.2.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

(அ) சொத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்தல்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய உருப்படிகளானவை திரண்ட தேய்வு மற்றும் ஏதேனும் குறைவுறும் நட்டங்கள் ஆகியவற்றைக் கழித்த கிரயத்தில் அல்லது உண்மைப் பெறுமதியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

அனைத்து ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய சகல உருப்படிகளும் ஆரம்பத்தில் திரண்ட தேய்வு மற்றும் ஏதேனும் குறைவுறும் நட்டங்கள் ஆகியவற்றைக் கழித்த கிரயத்தில் பதிவு செய்யப்படுகின்றன. சொத்து ஒன்றின் முக்கியமான கூறுகளனைவை வெவ்வேறாக இனங்காணப்பட்டு தேய்விடப்படுகின்றன. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் முக்கியமான பகுதிகளானவை கால இடைவெளிகளில் பதிலீடு செய்வதற்கு தேவைப்படுத்தப்படும் போது நிறுவனமானது பதிலீடு செய்யப்பட்ட பகுதியினை இனங்காணலிலிருந்து நீக்குவதுடன் புதிய பகுதியினை அதன் சொந்த இணைந்த பயன்தரு ஆயுட்காலம் மற்றும் தேய்வு ஆகியவற்றுடன் சேர்த்து இனங்காண்கின்றது. ஏனைய சகல திருத்த மற்றும் பராமரிப்புச் செலவுகளும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

(ஆ) கிரயம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் கிரயமானது அதன் கொள்வனவு விலையினையும் மற்றும் அதன் உத்தேச பாவனைக்காக தொழிற்படு நிலையில் அச் சொத்தினைக் கொண்டுவருவதற்கு நேரடியாக விளைந்த ஏதேனும் கிரயத்தினையும் உள்ளடக்குகின்றது.

சொத்துக்களின் உழைக்கும் ஆற்றலைப் பேணுவதற்கு அல்லது அதிகரிப்பதற்கென நிரந்த அடிப்படையில் சொத்துக்களை கொள்ளல் செய்தல், விஸ்தரித்தல் அல்லது மேம்படுத்தல் நோக்கத்திற்காக உறப்படும் அடுத்துவந்த செலவினமானது மூலதனச் செலவினமாகக் கருதப்பட்டுள்ளது.

பிரதான பரிசோதிப்பு மற்றும் பிரதான திருத்தச் செலவினம் உள்ளடங்கலாக, வெவ்வேறாக கணக்கிடப்படும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் உருப்படி ஒன்றின் கூறு ஒன்றினை பதிலீடு செய்வதற்கு உறப்படும் செலவினமானது மூலதனமாகக் கருதப்படும். அடுத்துவந்த ஏனைய செலவினமானது, அப் பகுதிக்குள் இணைந்த எதிர்கால பொருளாதார நன்மைகளானவை கம்பனிக்கு ஏற்படுவதுடன் அதன் கிரயமானது நம்பகரமாக அளவிடக்கூடியதாக இருக்கும் சாத்தியப்பாடு இருந்தால் மாத்திரமே மூலதனமாகக் கருதப்படும்.

(இ) மீள்மதிப்பீடு செய்தல்

விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டு இலங்கை திரிபோஷ கம்பனிக்குச் சொந்தமான அனைத்து சொத்துக்கள், பொறிகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
(அனைத்து ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களும் 2020 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் அறிக்கைக்கு அமைய மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களில் ஏற்புடைய மீள்மதிப்பு எண்ணிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.)

(ஈ) தேய்வு

அத்தகைய சொத்துக்களின் கிரயத்தினை அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்கு பதிவழிக்கும் பொருட்டு வருடம் ஒன்றுக்கு பின்வரும் வீதங்களில் நேர்கோட்டு (Straight - Line basis) அடிப்படையில் மூலதன ஒதுக்கிற்கு தேய்வானது சாட்டுதல் செய்யப்படுகின்றது.

கட்டடங்கள்	20 வருடங்களுக்கு மேல்
பொறித்தொகுதியும் இயந்திர சாதனமும்	10 வருடங்களுக்கு மேல்
மோட்டார் வாகனங்கள்	05 வருடங்களுக்கு மேல்
உபகரணம் மற்றும் கருவிகள்	05 வருடங்களுக்கு மேல்
ஆய்வுகூட உபகரணம்	10 வருடங்களுக்கு மேல்
விவசாய உபகரணம்	10 வருடங்களுக்கு மேல்
மின்சார வேலைகள்	05 வருடங்களுக்கு மேல்
அலுவலக உபகரணம்	10 வருடங்களுக்கு மேல்
தளபாடங்களும் பொருத்துகைகளும்	10 வருடங்களுக்கு மேல்
கணினி உபகரணம்	04 வருடங்களுக்கு மேல்
அருவச் சொத்துக்கள்	04 வருடங்களுக்கு மேல்

சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட மாதம் மற்றும் சொத்துக்களை அகற்றிய மாதத்தை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறாக மொத்த வீதத்திற்கு அமைய தேய்மானம் கணிப்பிடப்படும்.

(உ) இனங்காணப்படாமை

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் உருப்படி ஒன்றானது, கையுதிர்ப்பின் பேரில் அல்லது அதன் பாவனையிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எவையும் எதிர்பார்க்கப்படாத போது, இனங்காணலிலிருந்து நீக்கப்படுகின்றது. சொத்துக்களின் நீக்கம் தொடர்பான ஏதேனும் இலாபம் அல்லது நட்டமானது, அச் சொத்தானது இனங்காணலிலிருந்து நீக்கப்படும் ஆண்டிலுள்ள விஸ்தீரண வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படும்.

1.2.2 நடைபெறும் மூலதன வேலை

மூலதன நடைபெறும் வேலையானது கிரயத்தில் எடுத்துரைக்கப்படும். மூலதனமாக்கலினை எதிர்பார்த்து கட்டடங்களின் நிர்மாணிப்பில் நேரடியாக உணரப்படும் மூலதன நோக்கம் ஒன்றினைக் கொண்ட செலவினங்களே இவையாகும். மூலதன நடைபெறும் வேலையானது, அது பாவனைக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் பொழுது, அதாவது கம்பனியினால் உத்தேசிக்கப்பட்ட விதத்தில் தொழிற்படும் ஆற்றலினை இது கொண்டிருப்பதற்கு தேவையான அமைவிடம் மற்றும் நிலையில் உள்ள போது, ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய உரிய சொத்து வகைக்கு மாற்றப்படும். மூலதன நடைபெறும் வேலையானது ஏதேனும் திரண்ட சொத்துக் குறைவுறு நட்டங்களைக் கழித்து, கடன்பெறும் செலவுகள் உள்ளடங்கலாக, கிரயத்தில் எடுத்துரைக்கப்படும். எடுத்த விலையில் குறிப்பிடப்படும்.

1.2.3 அருவச் சொத்துக்கள்

ஓர் அருவச் சொத்தானது, அச் சொத்தின் பண்பினைக் கொண்ட எதிர்கால பொருளாதார நன்மைகளானவை நிறுவனத்திற்கு ஏற்படுவதுடன் அச் சொத்தின் கிரயமானது இலங்கை கணக்கீட்டு நியமம் 38 – அருவச் சொத்துக்கள் என்பதற்கு இணங்க நம்பகரமாக அளவிடக்கூடியதாக இருக்கும் சாத்தியப்பாடு இருந்தால், அது இனங்காணப்படும். அதற்கிணங்க, திரண்ட கடனழிவு மற்றும் ஏதேனும் திரண்ட சொத்துக் குறைவுறு நட்டங்களைக் கழித்து கிரயத்தில் நிதி நிலமைக் கூற்றில் இச் சொத்துக்கள் எடுத்துரைக்கப்படும்.

கணனி மென்பொருளானது நேர்கோட்டு முறையில் 4 வருட காலப்பகுதி ஒன்றுக்கு கடனழிவு செய்யப்படுகின்றது. கல்வித்திட்ட அபிவிருத்திக் கிரயமானது 4 வருட காலப்பகுதி ஒன்றுக்கு நேர்கோட்டு முறையில் பதிவழிக்கப்படுகின்றது.

1.2.4 பொருள் இருப்பு பதிவேடுகள்

காலங்கடந்த மற்றும் மெதுவாக விற்பனையாகி நகரும் பொருட்களை உரிய பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட பின்னர், சராசரிக் கிரயத்தில் இருப்புக்கள் விலைமதிக்கப்படுகின்றன. அதன் போது முதலில் பெற்றதை முதலில் வெளியேற்றல் (FIFO) முறைக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட முடிவாக்கல் செலவு மற்றும் விற்பனையை மேற்கொள்வதற்கான மதிப்பிடப்பட்ட செலவு ஆகியவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் இருப்புக்கள் விற்கப்படக்கூடிய விலையே தேறிய பணமாக மாற்றக்கூடிய பெறுமதியாகும்.

இருப்புக்களை அதன் தற்போதய அமைவிடத்திற்கும் நிலமைக்கும் கொண்டுவருவதில் ஏற்படும் கிரயமானது பின்வரும் சூத்திரத்தினைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றது:-

மூலப் பொருட்கள் - கொள்வனவு விலைக்கு

நடைபெறும் வேலை - கொள்வனவு விலைக்கு

முடிவுப் பொருட்கள் - நேரடி மூலப் பொருட்கள், நேர்க் கூலி ஆகியவற்றின் கிரயத்தில் சாதாரண தொழிற்பாட்டின் அடிப்படையில் நிலையான உற்பத்தி மேந்தலைகளின் பொருத்தமான விகிதாசாரம்

மதிப்பிடப்பட்ட முடிவாக்கல் செலவு மற்றும் விற்பனையை மேற்கொள்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட செலவு ஆகியவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையே தேறிய பணமாக மாற்றக்கூடிய பெறுமதியாகும்.

1.2.5 சொத்துக்களின் குறைவு

சொத்துக் குறைவு பற்றிய ஏதேனும் குறிகாட்டி உள்ளதா என்பதை வரையறுப்பதற்கு ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகைகள் மீளாய்வு செய்யப்படுகின்றன. அத்தகைய ஏதேனும் குறிகாட்டி காணப்படின், அதன் பின்னர் சொத்துக்களை மீளப்பெறக்கூடிய தொகையானது மதிப்பிடப்படுகின்றது. சொத்து ஒன்றின் கொண்டு செல்லல் தொகை அல்லது காசினை உண்டுபண்ணும் அலகானது அதன் மீளப்பெறக்கூடிய தொகையிலும் பார்க்க அதிகரித்தால் குறைவுறு நட்டம் ஒன்று இனங்காணப்படும். மீளப்பெறக்கூடிய தொகையினை வரையறுப்பதற்கு பாவிக்கப்படும் மதிப்பீடுகளில் மாற்றமொன்று இருந்திருப்பின் குறைவுறு நட்டமானது நீக்கப்படும்.

1.2.6 நிதிச் சொத்துக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 இனது நோக்கெல்லைக்குள் நிதிச் சொத்துக்களானவை இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள், முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள், விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்களாக அல்லது பொருத்தமுடையதாக, பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு ஒன்றில் பாதுகாப்பு ஆவணங்களாக குறித்தொதுக்கப்பட்டு பெறப்பட்டனவாக வகைப்படுத்தப்படும். கம்பனியானது ஆரம்ப இனங்காணலில் நிதிச் சொத்துக்களின் வகைப்பாட்டினை வரையறுக்கின்றது.

சகல நிதிச் சொத்துக்களும், சொத்துகள் என்னும் பட்சத்தில் இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியில் அல்லாது, கொடுக்கல் வாங்கலுக்கு நேரடிக் காரணமாயிருந்த செலவுகளைக் கூட்டி உண்மைப் பெறுமதியில் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றது.

கடன்களும் வருமதிகளும் வைப்புக்களும் எத்திகதியில் ஆரம்பிக்கின்றனவோ அத் திகதியிலேயே கம்பனியானது அவற்றை ஆரம்பத்தில் இனங்காண்கின்றது. ஏனைய சகல நிதிச் சொத்துக்களும் (இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியில் குறித்தொதுக்கப்பட்ட சொத்துக்கள் உள்ளடங்கலாக), கம்பனியானது ஆவணத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பாக மாறும் வியாபாரத் திகதியில் ஆரம்பத்தில் இனங்காணப்பட்டுள்ளன.

நிதிச் சொத்தொன்றிலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த உரிமைகள் முடிவடையும் போது அல்லது நிதிச் சொத்தின் உரிமைத்துவத்தின் குறிப்பிடத்தக்க ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகள் சகலதும் மாற்றப்படும் கொடுக்கல் வாங்கல் ஒன்றிலுள்ள நிதிச் சொத்துத் தொடர்பான ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகளை கம்பனி மாற்றும் போது கம்பனியானது அச் சொத்தினை இனங்காணலிலிருந்து நீக்குகின்றது. கம்பனியினால் உருவாக்கப்பட்ட அல்லது பிடித்துவைக்கப்பட்ட, மாற்றப்பட்ட நிதிச் சொத்துக்களிலான ஏதேனும் வட்டியானது வேறானதோர் சொத்து அல்லது பொறுப்பாக இனங்காணப்படும்.

கம்பனியானது தொகையினை ஈடாக்குவதற்கான சட்ட உரிமை ஒன்றினைக் கொண்டிருந்தால் மாத்திரமே அத்துடன் ஒன்றில் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது ஒரே நேரத்தில் சொத்தினை பணமாக்கி பொறுப்பினைத் தீர்ப்பதற்கு உத்தேசிக்கும் போது நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஈடாக்கப்பட்டு தேறிய தொகை நிதி நிலமைக் கூற்றில் முன்னளிக்கப்படும்.

கம்பனியின் நிதிச் சொத்துக்களானவை காசு மற்றும் குறுங்கால முதலீடுகள் அத்துடன் வியாபாரம் மற்றும் ஏனைய வருமதிகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

(அ) இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள்

வியாபாரத்திற்காக வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களையும் மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணலின் பேரில் குறித்தொதுக்கப்பட்ட நிதிச் சொத்துக்களையும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் உள்ளடக்குகின்றன. கிட்டிய எதிர்காலத்தில் விற்கும் அல்லது மீள்கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக நிதிச் சொத்துக்கள் கொள்ளல் செய்யப்படுவதனால் வியாபாரத்திற்கு வைக்கப்படுவனவாக அவை வகைப்படுத்தப்படுகின்றன.

முழுமொத்த விரிவான வருமானக் கூற்றில் நிதி வருமானம் அல்லது நிதிச் செலவினத்தில் இனங்காணப்பட்ட சாதாரணப் பெறுமதியிலான மாற்றங்களுடன் சேர்த்து உண்மைப் பெறுமதியிலான நிதி

நிலமைக் கூற்றில் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் கொண்டுவரப்படுகின்றன.

இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான ஆரம்ப இனங்காணலின் பேரில் நிதிச் சொத்து எதனையும் கம்பனியானது குறித்தொதுக்கியிருக்கவில்லை.

(ஆ) கடன்களும் வருமதிகளும்

செயலூக்கமிக்க சந்தையில் விலைகூறப்படாத நிலையான அல்லது வரையறுக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்களாக கடன்களும் வருமதிகளும் காணப்படும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைவுறுதலைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் அத்தகைய நிதிச் சொத்துக்கள் பின்னர் அளவிடப்படுகின்றன. பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தின் (EIR) இணைந்த பகுதியாக இருக்கும் கொள்ளல் மற்றும் கட்டணம் அல்லது கிரயங்கள் தொடர்பிலான ஏதேனும் கழிவு அல்லது உபகார வழங்கலினைக் கவனத்திற் கொண்டு கடனழிவுக் கிரயம் கணிப்பிடப்படுகின்றது. பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) கடனழிவானது முழுமொத்த வருமானக் கூற்றில் ‘நிதி வருமானத்தில்’ உள்ளடக்கப்படுகின்றது. சொத்துக் குறைவுறுதலிலிருந்து எழும் நட்டங்களானவை நிதிக் கிரயத்தில் விஸ்தீரண வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

வியாபார வருமதிகள், ஊழியர் கடன்கள், வைப்புக்கள், முற்பணங்கள், ஏனைய வருமதிகள் மற்றும் காசும் காசுக்குச் சமமான விடயங்களும் ஆகியவற்றை கடன்களும் வருமதிகளும் உள்ளடக்குகின்றன.

ஊழியர் கடன்

சபையின் பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட பிரதான ஊழியர் கடன்கள் இரு வகைப்படும்.

i. நலன்புரிக் கடன்கள் - அதிகபட்ச தொகை ரூ. 500,000/= ஆகும். நிதி உள்ளதைப் பரீட்சித்த பின்னர் வருடத்திற்கு 5.00% வட்டி வீதத்தில் உச்சமாக ஐந்து வருட காலத்திற்குள் அறிவட்டுக்கொள்ள முடியும்.

ii. இடர் கடன் - அதிகபட்ச தொகை ரூ. 250,000/= ஆகும். நிதி உள்ளதைப் பரீட்சித்த பின்னர் வருடத்திற்கு 4.20% வட்டி வீதத்தில் உச்சமாக ஐந்து வருட காலத்திற்குள் அறிவட்டுக்கொள்ள முடியும்.

(இ) முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள்

நிலையான அல்லது வரையறுக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்கள் மற்றும் நிலையான முதிர்ச்சிக் காலத்தையுடைய நிதிச் சொத்துக்கள் என்பன கம்பனியானது அவற்றை முதிர்வுக் காலம் வரை வைத்திருப்பதற்கான சாதகமான உத்தேசம் மற்றும் ஆற்றலினைக் கொண்டுள்ள போது முதிர்வுக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைவுறுதலைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துகள் அளவிடப்படுகின்றன. பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) கடனழிவானது முழுமொத்த வருமானக் கூற்றில் ‘நிதி வருமானத்தில்’ உள்ளடக்கப்படுகின்றது. சொத்துக் குறைவுறுதலிலிருந்து எழும் நட்டங்களானவை நிதிக் கிரயத்தில் விஸ்தீரண வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

அரசாங்கப் பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புக்களிலான முதலீடுகளானவை முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்து முதலீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஈ) விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதி முதலீடுகள்

விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்களாக குறித்தொதுக்கப்பட்ட அல்லது மேற்போந்த நிதிச் சொத்துக்களின் எந்தவிதமான வகுதிக்குள்ளும் வகைப்படுத்தப்படாத பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்களே விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப இனங்காணலின் பின்னர், அவை உண்மைப் பெறுமதியில் அளவிடப்படும் அத்துடன் குறைவுறு நட்டங்களினை விட அதன்கண்ணுள்ள மாற்றங்களானவை ஏனைய முழுமொத்த வருமானத்தில் இனங்காணப்பட்டு நிதியங்கள் மற்றும் ஒதுக்குகளில் ஒதுக்கப்பட்ட உண்மைப் பெறுமதியில் முன்னளிக்கப்படும். விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான கடன் ஆவணங்கள் தொடர்பான வட்டி வருமானமானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) முறையினைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட்டு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும். முதலீடு ஒன்றானது இனங்காணலில் இரத்துச் செய்யப்படும் போது நிதியங்கள் மற்றும் ஒதுக்குகளில் திரளும் இலாபம் அல்லது நட்டமானது இலாபம் அல்லது நட்டமாக மீள் வகைப்படுத்தப்படும்.

விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான முதலீடாக ஆரம்ப இனங்காணலின் பேரில் நிதிச் சொத்து எதனையும் கம்பனியானது குறித்தொதுக்கியிருக்கவில்லை.

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 நிதிக் கருவிகள்

நிதிக் கருவிகள் என்பது இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 க்குப் பதிலாக நிதிக் கருவிகள் எனும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 பதிலீடாகும் (வகைப்படுத்தல் மற்றும் மதிப்பிடுதல், குறைவடைத்தல் மற்றும் சேதம் ஏற்படுதல் (ஹேஜ்) கணக்கீடு எனும் நிதிக் கருவிகளுக்கு மூன்று துறைகளையும் ஒன்றாகக் கொண்டு 2018 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 01 திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கப்படும் வரடாந்த காலப் பிரிவுகளுக்கு அடையாளம்காணல் மற்றும் மதிப்பிடுதல்.

சபையானது, இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 ஐ அனுமதித்துக்கொண்டது முன்பிருந்த முறையைப் பயன்டுத்தியாகும். மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் கம்பனியின் நிதிக் கூற்றுக்களுக்கு இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 பாரிய தாக்கத்தை ஏற்படுத்தாது என்பதே கம்பனியின் முடிவாகும்.

வகைப்படுத்தலும் மதிப்பிடலும்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 இன் கீழ் கிடைக்க வேண்டிய வர்த்தக நிதி தவிர, கம்பனியின் ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே நிதிச் சொத்தொன்று மதிப்பிடப்படுவது அதன் சாதாரண பெறுமதிக்காகும். மேலும், மதிப்பீடு செய்யப்படுவது இலாபம் அல்லது நட்டத்தின் கொடுக்கல் வாங்கல் கிரயத்தினூடாக சாதாரண பெறுமதி மீது கணக்கிடப்படாத நிதிச் சொத்துக்கள் தொடர்பிலாகும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 இன் கீழ் கடன் நிதிக் கருவிகள், இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான சாதாரண பெறுமதியின் மீதும் கடனழிப்புச் செய்யப்பட்ட கிரயம் அல்லது வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக சாதாரண பெறுமதி மீதும் பின்னர் அளவிடப்படும். இந்த வகைப்பாடு, இரண்டு நியதிகள் மீது உள்ளது. அதாவது, சொத்து முகாமைத்துவத்திற்கான கம்பனியின் வியாபார மாதிரி மீது மற்றும் கருவிகளின் ஒப்பந்த ரீதியான நிதிப் பாய்ச்சல், எஞ்சியுள்ள "ஆரம்ப தொகையின் மீது மற்றும் வட்டித் தொகையை மாத்திரம் செலுத்துதல்" என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தல் என்பதன் மீதுமாகும்.

2018 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி ஆரம்பமாக விண்ணப்பிக்கும் திகதியளவில் நிறுவனத்தின் வியாபார மாதிரி மதிப்பீடு செய்யப்படுவதோடு, பின்னர் அது 2018 ஜனவரி மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னர் அடையாளம் காணப்படாத நிதிச் சொத்துக்கள் கடந்த காலத்திற்கு ஏற்புடையவாறு பயன்படுத்தப்படும். கடன் கருவிகளின் மீது ஒப்பந்த நிதிப் பாய்ச்சல்களை மதிப்பீடு செய்தல், ஆரம்ப தொகை மற்றும் வட்டித் தொகைகளைக் கொண்டு மாத்திரம் அமைந்திருப்பது சொத்துக்களின் ஆரம்ப அடையாளத்தின் போது வழங்கப்படும் விடயங்களின் அடிப்படையிலாகும்.

கம்பனியின் நிதிப் பொறுப்புக்களுக்கான கணக்கீடு இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 இன் கீழ் உள்ளவாறே காணப்படும்.

1.2.7 நிதிச் சொத்துக்கள் குறைவடைதல்

ஒரு நிதிச் சொத்தானது அல்லது நிதிச் சொத்துக்கூட்டம் ஒன்றானது குறைவடைகின்றது என்பதான ஏதேனும் யதார்த்தமான சான்று உள்ளதாவென ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் இக் கம்பனியானது மதிப்பிடுவதுடன் அத்தகைய குறைவானது நிகழ்ந்திருந்தால் அக் குறைவுறு தொகையானது சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சலின் நிகழ்காலப் பெறுமதிக்கும் இடையில் வேறுபாட்டினைக் கருத்திற்கொள்வதன் மூலம் கணிப்பிடப்படுகின்றது.

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 நிறைவேற்றப்பட்டதன் மூலம், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 இல் ஏற்பட்ட இழப்பு தொடர்பான அணுகுமுறை தொடர்பான பிரவேசத்திற்குப் பதிலாக எதிர்கால நோக்குடன் கடன்- இழப்பு அணுகுமுறை மீள்நிறுவப்பட்டதன் மூலம் நிதிச் சொத்துக்களுக்கான பாதிப்பு, நட்டங்கள் குறித்த நிறுவனத்தின் கணக்கீடு அடிப்படையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.அனைத்து கடன்கள் மற்றும் ஏனைய கடன் நிதியளிப்பு சொத்துக்களுக்கு இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயமான மதிப்பில் பராமரிக்கப்படாத எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கு ஒரு குறிப்பிட்ட கொடுப்பனவை ஒதுக்கிவைக்க இலங்கையின் கணக்கீட்டு நியமங்கள் 9 மூலம் பணிக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு என்பது ஒப்பந்தத்தின்படி ஒப்பந்த பணப்புழக்கத்திற்கும் நிறுவனத்தை அடைய எதிர்பார்க்கப்படும் அனைத்து பணப்புழக்கத்திற்கும் இடையிலான வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டது. ஏதேனும் குறைபாடு இருப்பின் அது சொத்துகளின் அசல் பயனுள்ள வட்டி விகிதத்திற்கு அண்ணளவாக கழிவு செய்யப்படுகின்றது.

வர்த்தகம் மற்றும் பிற வருமதிகளுக்கான நிலையான அணுகுமுறை நிறுவனத்தால் பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள், அவற்றின் வாழ்நாளில் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளின் அடிப்படையில் கணக்கிடப்படல் வேண்டும்.

1.2.8 காசும் காசுக்குச் சமமான விடயங்களும்

கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள வைப்புக்கள், நிலையான வைப்புக்கள் மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் என்பவற்றை காசும் காசுக்குச் சமமான விடயங்களும் உள்ளடக்குகின்றது.

1.3 **பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்**

கேள்வியின் பேரிலான கொடுப்பனவிற்கு அல்லது அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் நிலுவையாகவுள்ளவையே நிதி நிலமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்ட பொறுப்புக்களாகும். அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் கொடுப்பனவிற்கு நிலுவையாகவுள்ள அம் மீதிகளே நடைமுறை சாராத (நிலையான) பொறுப்புக்களாகும்.

இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அறிந்த சகல பொறுப்புக்களும் கணக்கிடப்பட்டுள்ளன. கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக சட்ட அல்லது உட்கிடையான கடப்பாடு ஒன்றினை கம்பனியானது கொண்டிருக்கும் போது ஏற்பாடுகளும் பொறுப்புக்களும் இனங்காணப்படுகின்றன அத்துடன் பொருளாதார நலன்களின் வெளிப் பாய்ச்சலானது இக்கடப்பாட்டினைத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்படும் என்பது சாத்தியப்படக்கூடியதாக இருக்கின்றது.

1.3.1 ஊழியர் நலன்கள்

(அ) ஓய்வூதியப் பணிக்கொடை ஏற்பாடு

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 19 நிறுவனத்தினால் பின்பற்றப்பட்டுள்ளது. அத்தோடு, நிறுவனத்தின் ஓய்வூதிய நலன் பொறுப்பின் தற்போதைய பெறுமதிக்கு நம்பகமான மதிப்பீட்டை உருவாக்கும் பொருட்டு கருத்திட்ட அலகுக் கடன் திட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்பாட்டினை கணிப்பீடு செய்வதற்காக பாவிக்கப்படும் அடிப்படை எடுகோள்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

கழிவிடப்பட்ட வீதம்	08%
எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம்	10%
பணியாட்டொகுதிப் புறழ்வு	02%
ஓய்வுபெறல் வயது	60 வருடங்கள்

தொடர்ந்து செல்லும் வர்த்தக கம்பனியாக இக் கம்பனியானது தொடரும்.

(ஆ) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்

நிறுவனம் ஒன்றானது தனியான நிறுவனம் ஒன்றாக நிலையான பங்களிப்பினைச் செலுத்துவதும் அத்துடன் மேலதிக தொகை ஒன்றினைச் செலுத்துவதற்கான சட்ட அல்லது உட்கிடையான கடப்பாடு ஒன்றினை கொண்டிராததுமான தொழிலுக்குப் பின்னரான திட்டம் ஒன்றே வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமாகும். வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்திற்கான பங்களிப்புக்களுக்கான கடப்பாடுகளானவை, அவை நிலுவையிலுள்ள போது, விஸ்தீரண வருமானக் கூற்றில் செலவு ஒன்றாக இனங்காணப்படும்.

(இ) ஊழியர் சேமலாப நிதியம்

அனுமதிக்கப்பட்ட சேமலாப நிதியத்திற்கு ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தின் அடிப்படையில் கம்பனியும் ஊழியர்களும் முறையே 15% இனையும் 10% இனையும் 2019 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் முதல் எதிர்வரும் மாதங்களுக்கு பங்களிப்புச் செய்கின்றனர். (இதற்கு முன்னர் கம்பனியில் காணப்பட்ட வீதங்கள் கம்பனி மற்றும் ஊழியர்கள் 12% மற்றும் 8% பங்களிப்பாகும்.)

(ஈ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோஷா கம்பனியானது ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தின் அடிப்படையில் 3% இனை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றது.

1.3.2 வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகள்

வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகளானவை கிரயத்தில் எடுத்துரைக்கப்படுகின்றது.

1.3.3 வரி விதிப்பு

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் அமுல்படுத்தப்படும் 2018.04.01 ஆம் திகதி முதல் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட வருமான வரிகளும் இதில் அடங்கும். 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் அதன் பின்னர் அதற்குச்செய்யப்படும் திருத்தங்களுக்கு அமைய வருமானம் வரி மதிப்பிடப்படும்.

பெறுமதிசேர் வரி (VAT) 2022 இல 14 சட்டத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதோடு, அது 2022 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி முதல் செயற்படுகின்றது. வெட் வரி சட்டத்திற்கு அமைய கழிவு விற்பனைகள் மீது வெட் வரி செலுத்துவதற்கு கம்பனி கட்டுப்பட்டுள்ளது.

1.3.4 பிற்போடப்பட்ட வரி

பிற்போடப்பட்ட வரி உருவாக்கப்படுவது, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்குரிய வரி அடிப்படையின் ஏற்புடைய நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அறிக்கையிடும் திகதியில் அந்தச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் காணப்படும் இருப்புக்கள் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதியாகும். அதற்கமைய தற்காலிக மாறுபாடுகள் மீது தங்கியுள்ள பொறுப்புக்கள் முறைப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1.3.5 மூலதனப் பொறுப்புக்களும் எதிர்பாராத பொறுப்புக்களும்

நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளினால் அல்லது பொருளாதார நலன்களின் மாற்றமானது சாத்தியப்படக்கூடியதாகவில்லாத அல்லது நம்பகரமாக மதிப்பிடப்படக்கூடியதாகவில்லாத நிகழ்கால கடப்பாடுகளின் மூலம் மாத்திரமே அவற்றின் இருப்பு உறுதிப்படுத்தப்படும் சாத்தியமான கடப்பாடுகளாக எதிர்பாராத பொறுப்புக்கள் உள்ளன.

இக் கம்பனியின் மூலதனப் பொறுப்புக்களும் எதிர்பாராத பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களின் உரிய குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

1.4 விரிவான வருமானக் கூற்று

மூலதன ஒதுக்கு – (மூலதனக் கொடைகளுடன் தொடர்புபட்டவை)

2011 ஆம் ஆண்டு முதல் சுகாதார அமைச்சு, கெயார் (CARE) மற்றும் வரையறுக்கப்பட்ட சிலோன் புகையிலைக் கம்பனி ஆகியவற்றினால் வழங்கப்பட்ட, நிதிச் சொத்துக்கள் மீது செலவழிக்கப்படும் நிதியங்கள் மூலதனக் கொடைகளாக கருதப்பட்டுள்ளன ஆதலால் இவ் உருப்படிகள் மீதான பெறுமானத் தேய்வானது, அத் தேய்வினை ஆண்டுக்கான மொத்த தேய்வுக் கட்டணத்திற்கு எதிராக ஈடாக்கும் அதேவேளை உரிய மூலதன கொடைக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.4.1 பிற்போடப்பட்ட வருமானம் - மானியக் கொடை

அரசாங்க மானியக் கொடைகளானவை, அக்கொடையானது பெற்றுக்கொள்ளப்பட்டு அதனுடன் இணைந்த சகல நிபந்தனைகளும் இணங்கியொழுகப்படும் என்னும் நியாயமான உறுதிப்பாடு காணப்படுமிடத்து, இனங்காணப்படும். கொடையானது செலவின வகைக்குறிப்புக்கு உட்படும் போது அந்தக் கொடை, அதற்கு நட்டஈடு வழங்குவதற்கு கருதும் போது செலவுக்கு படிப்படியாக செம்மையாக்கல் செய்து ஏற்புடைய காலத்திற்கான வருமானமாக கணிப்பிடப்படும். அந்தக் கொடை சொத்துக்குரியதாக இருக்கும் போது பிற்போடப்பட்ட வருமானமாக அடையாளம்கண்டு ஏற்புடைய சொத்தின் உத்தேச பிரயோசனமான ஆயுட்காலத்திற்குள் சமமான அளவில் வருமானத்திற்கு விடுவிக்கப்படும்.

வேறு வகையில் கூறுவதாயின் செய்யப்பட்ட செலவினத்திற்கு கம்பனிக்கு நட்டஈட்டைப் பெற்றுத்தரும் கொடைகள், செலவினங்கள் அடையாளம் காணப்படும் காலப் பிரிவிற்குரிய விஸ்தீரண வருமானக் கூற்று / இலாப நட்டக் கூற்றில் வருமானமாக அடையாளம் காணப்படும். ஏதேனும் சொத்தொன்றின் செலவுக்கான கம்பனிக்கு நட்டஈடு வழங்கும் போது கொடைகள் மற்றும் நிதி நிலமைக் கூற்றில் அடையாளம் காணப்படும்.

கம்பனிக்கு நிதி அல்லாத கொடைகள் கிடைக்கும் போது சொத்துக்கள் மற்றும் கொடைகள் பெயரளவில் பதிந்து அதற்கு காரணமாக அமைந்த சொத்துக்களின் நலன்களுக்கு சமமான வருடாந்த தவணைக் கட்டணங்களில் அவற்றின் உத்தேச பிரயோசனமிக்க ஆயுட்காலம் மற்றும் பயன்பாட்டு முறை மீது இலாபம் அல்லது நட்டக் கூற்றுக்கு விடுவிக்கப்படும்.

1.4.2 செலவினம்

(அ.) உறப்படும் செலவுக்கும் குறித்த வருமான உருப்படிகளின் உழைப்புக்கும் இடையிலான நேரடி இணைப்பின் அடிப்படையில் முழுமொத்த வருமானக் கூற்றில் செலவுகள் இனங்காணப்படும். இக் கம்பனியினை நடாத்துதல் மற்றும் வினைத்திறனான நிலையில் மூலதனச் சொத்துக்களைப் பராமரித்தல் ஆகியவற்றில் உள்ளாகும் சகல செலவினங்களும் ஆண்டிற்கான மிகையினை அடையும் வருமானத்துக்கு எதிராகச் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது.

1.4.3 நிதிச் செலவினம் / வருமானம்

முதலீடு செய்யப்பட்ட நிதியங்களின் மீது அட்டுறு அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டியினை நிதி வருமானம் உள்ளடக்குகின்றது.

1.5 காசுப் பாய்ச்சல் கூற்று

இலங்கை கணக்கீட்டு தர நியமங்கள் 7 இற்கிணங்க காசுப் பாய்ச்சற் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

1.6 **அறிக்கையிடும் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள்**

அறிக்கையிடும் காலப்பகுதிக்குப் பின்னர் நிகழும் நிகழ்வுகளின் அடிப்படையான விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவசியமானவிடத்து, பொருத்தமான சீராக்கங்கள் செய்யப்பட்டுள்ளன.

1.7 **புதிய கணக்கீட்டு நியமங்கள், திருத்தங்கள் மற்றும் பொருள்கோடல்கள்**

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள், 2018 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் அமுலிலுள்ள புதிய நியமங்களை ஏற்றுக்கொள்வதைத் தவிர, கடந்த நிதியாண்டிற்கான நிறுவனத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளுடன் இணங்குகின்றன. ஏற்கனவே வழங்கப்பட்ட ஆனால் இன்னும் நடைமுறையில் இல்லாத வேறு எந்த நியமங்கள், பொருள்கோடல்கள் அல்லது திருத்தத்தையும் நிறுவனம் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.

(i) "நிதிக் கருவிகள்: அடையாளப்படுத்தல் மற்றும் மதிப்பிடல்"" எனும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 இன் தரநிலையானது பல வகைப்பாடு மற்றும் அளவீட்டு மாதிரிகளால் மாற்றப்பட்டு ஆரம்பத்தில் இரண்டு வகைகளை மட்டுமே கொண்டிருந்தது. அதாவது, கடனழிப்புச் செலவு மற்றும் சாதாரணப் பெறுமதி எனக் காணப்பட்ட ஒற்றை மாதிரி இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 எனும் "நிதிக் கருவிகள்"" பதிலீடுசெய்யப்பட்டுள்ளது.

(ii) பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான ஒப்பந்தங்களை உள்ளடக்கிய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 18 மற்றும் கட்டுமான ஒப்பந்தங்களை உள்ளடக்கிய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 11 க்குப் பதிலாக, "வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களின் மூலம் கிடைக்கும் வருமானம்"" என்ற இலங்கை கணக்கீட்டு இலக்கம் 15 எனும் நியமம் பதிலீடுசெய்யப்பட்டுள்ளது. புதிய நியமம் ஒரு தயாரிப்பு அல்லது சேவையின் கட்டுப்பாட்டை வாடிக்கையாளருக்கு வழங்கும்போது வருமானத்தை அடையாளம் காணல் எனும் அடிப்படையில் அமைந்துள்ளது. எனவே கட்டுப்பாடு என்ற கருத்து தற்போதுள்ள அபாயங்கள் மற்றும் வெகுமதிகள் எனும் கருத்தில் பதிலீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) இலங்கை நிதி அறிக்கை முறைமை 1, அதாவது, இலங்கை கணக்கீட்டு நியமங்களை முதலில் கடைப்பிடித்தல், இலங்கை நிதி அறிக்கை முறைமை 7, அதாவது நிதிக் கருவிகளை வெளிப்படுத்தல் மற்றும் இலங்கை நிதி அறிக்கை முறை 19, அதாவது "ஊழியர் நலன்கள்" மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் முறை 10, அதாவது "இணைந்த நிதிக் கூற்றுக்களுக்கு" இனியும் பொருந்தாத திருத்தங்கள், இடைநிலை விதிகளை உள்ளடக்கிய தொடர்புடைய குறுகிய கால விலக்களிப்புகள் குறைக்கப்படுகின்றன.

(iv) இலங்கை நிதி அறிக்கையிடல் முறை 16, அதாவது "குத்தகை" அடிப்படையாக குத்தகைதாரரால் செய்யப்படும் கணக்கீட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் மற்றும் நிதி நிலமை அறிக்கையின் அடிப்படையில் கிட்டத்தட்ட அனைத்து குத்தகைகளையும் அடையாளம் காண முடியும். செயற்பாட்டு மற்றும் நிதிக் குத்தகைக்கு இடையே உள்ள தற்போதைய வேறுபாட்டை நியமம் நீக்குகின்றது. ஒரு சொத்தை (குத்தகைக்கு விடப்பட்ட பொருளைப் பயன்படுத்துவதற்கான உரிமை) அடையாளம் காண்பதும் மிக முக்கியமாக, அனைத்து குத்தகைகளுக்கும் வாடகை செலுத்துவதற்கான நிதிப் பொறுப்பு. குறுகிய கால மற்றும் குறைந்த மதிப்புள்ள குத்தகைகளுக்கு மாற்று விலக்களிப்புகள் உள்ளன.

இலங்கை நிதி அறிக்கையிடல் முறைமை 16 மூலம் குத்தகையை அடையாளம் காணல், அளவீடுசெய்தல், சமர்ப்பித்தல் மற்றும் வெளிப்படுத்தல் ஆகியவற்றின் அடிப்படைகள் விரிக்கப்பட்டுள்ளன. அத்தோடு, இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 17 இன் கீழ் "குறைந்தபட்ச மதிப்புள்ள" 12 மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான குத்தகை காலம் கொண்ட குறுகிய காலத்திற்கான சில விடுவிப்புக்கள் தவிர, நிதிக் குத்தகைக் கணக்கியல் போன்ற ஐந்தொகை மாதிரியின் கீழ் அனைத்து குத்தகைதாரர்களும் கணக்கு வைக்க வேண்டியது அவசியமாகும். இந்த நியமம் 2019 ஜனவரி 01 ஆம் திகதி அல்லது அதற்குப் பிறகு ஆரம்பிக்கும் ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும்.

(v) பகுதிகளாக வகையீடு செய்யப்பட்ட நிதிக் கருவிகளுக்கு பங்கிலாபத்தின் மூலம் நிகழும் வரி விளைவுகளை அடையாளம் காணவேண்டியது பகிர்ந்தளிக்க முடியுமான இலாபத்தை உழைக்க முடியுமான கடந்தகால கொடுக்கல் வாங்கல்கள் அல்லது நிகழ்வுகளின் அடிப்படையில் அடையாளம் காணும் போது என இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 12 ஆன "வருமான வரி" நியமத்தில் திருத்தங்களினூடாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது. ஏற்புடைய நியமத்தையொட்டிய மேம்படுத்தல்கள் 2019 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் கணக்கீட்டு காலப்பிரிவுகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

(vi) ஏதேனும் ஏற்புடைய தகுதியை அடையும் சொத்தொன்று அதன் உத்தேச பயன்பாட்டுக்காகவோ அல்லது விற்பனைக்காகவோ தயார்படுத்தப்பட்ட பின்னர் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட கடன் பெறுகை செலத்தப்படாது நிலுவையாக உள்ள போது அது சாதாரண கடன் பெறுகையின் ஒரு பகுதியாக மாறுமென இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 23 "கடன்பெறும் கிரயத்தை" ஒட்டி மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஊடாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. ஏற்புடைய நியமத்தின் மேம்படுத்தல்கள் 2019 ஜனவரி

மாதம் 01 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் கணக்கீட்டு காலப்பிரிவுகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

(vii) இலங்கை நிதி அறிக்கையிடல் முறை 3, அதாவது "வியாபார கூட்டிணைப்பு" என்பதற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டிருப்பது ஒன்றிணைந்த செயற்பாடான வியாபாரமொன்றின் கட்டுப்பாட்டைப் பெற்றுக்கொள்ள கட்டங்கள் அடிப்படையில் அடைந்துகொள்ளும் வியாபார கூட்டிணைப்பு என்பதாகும். நியமத்தின் மேம்படுத்தல்கள் 2019 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் கணக்கீட்டு காலப்பிரிவுகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

1.8 **விற்பனைக்கான நடைமுறை சாராத சொத்துக்கள்**

தொடர்ந்து பாவிப்பதை விட முதற்படியாக கையுதிர்த்தல் ஒன்றுக்கூடாக மீளப்பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படும் நடைமுறை சாராத சொத்துக்களானவை விற்பனைக்கு வைத்திருக்கப் படுபவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. விற்பனைக்கு வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்படுவதற்கு உடன் முன்னர், இச் சொத்துக்களானவை இக் கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கிணங்க மீள அளவிடப்பட்டுள்ளன. அதன் பின்னர், இச் சொத்துகளானவை அவற்றின் கொண்டு செல்லல் தொகை மற்றும் விற்பனைக்கான கிரயம் கழித்த உண்மைப் பெறுமதி ஆகியவற்றிலும் குறைவாக அளவிடப்படுகின்றன. விற்பனைக்கு வைத்திருக்கப்படுவதான ஆரம்ப வகைப்படுத்தல் மீதான சொத்துக் குறைவுறு நட்டங்கள் மற்றும் மீள் அளவீட்டின் பேரில் அடுத்துவரும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் என்பன இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளன. ஏதேனும் திரண்ட குறைவுறு நட்டத்தினை விடக் கூடுதலாக இலாபங்கள் இனங்காணப்படுவதில்லை.

1.9 **வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோஷ லிமிடட் நிறுவனத்திற்கு ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் தொடர்பிலான பகுப்பாய்வு**

இலக்கு 2 - பூச்சிய பட்டினி

பட்டினியை முடிவுக்கு கொண்டுவரல், உணவுப் பாதுகாப்பை அடைந்துகொள்ளல் மற்றும் போஷாக்கை மேம்படுத்தல் மற்றும் பேண்தகு விவசாயத்தை ஊக்குவித்தல்.

2.1 ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு

2030 ஆம் ஆண்டளவில் பட்டினியை முடிவுக்கு கொண்டு வந்து அனைத்து மக்களுக்கும் விசேடமாக வறியவர்களுக்கு மற்றும் பிள்ளைகள் உள்ளிட்ட அபாய நிலைமைக்கு உட்படக்கூடிய ஆட்களுக்கு வருடம் பூராகவும் பாதுகாப்பான போஷாக்குள்ள மற்றும் போதியளவு உணவு வழங்குவதை உறுதிப்படுத்தல்.

2.1.1 குறிகாட்டி

போஷாக்கின்மை பரவுதல்.

2.2 ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு

2025 ஆம் ஆண்டளவில் 5 வயதுக்கு குறைந்த பிள்ளைகளின் வளர்ச்சி குன்றுதல் மற்றும் போஷாக்கின்மை தொடர்பில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ளல் அடங்களாக 2030 ஆம் ஆண்டளவில் அனைத்துவிதமான போஷாக்கின்மைகளையும் முடிவுக்கு கொண்டுவரல் மற்றும் பூப்பெய்திய பெண் பிள்ளைகள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார் மற்றும் முதியோர்கள் ஆகியோரின் போஷனைத் தேவைப்பாட்டை நிவர்த்தி செய்தல்.

2.2.1 குறிகாட்டி

5 வயதுக்கு குறைந்த பிள்ளைகளுக்கு மத்தியில் வகைக்கு அமைய (போஷாக்கின்மை மற்றும் அதிகூடிய நிறை) போஷாக்கு குறைபாடு (உயரத்திற்கமைய நிறை >+2 அல்லது <-2 நியம விலகல்) உலக சுகாதார அமைப்பின் பிள்ளைகளின் வளர்ச்சித் தரங்களின் சராசரிக்கு அமைய) பரவிக் காணப்படல்.

2.3 ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு

காணி, ஏனைய உற்பத்தி வளங்கள் மற்றும் உள்ளீடுகள், அறிவு, நிதிச் சேவைகள், சந்தை மற்றும் பெறுமதி சேர்த்தல் மற்றும் பண்ணை அல்லாத தொழில்களுக்கான சந்தர்ப்பம் போன்றவற்றினூடாக அவற்றுக்குப் பாதுகாப்பான மற்றும் சமமான பிரவேசத்தை வழங்குதல் உள்ளிட்ட 2030 ஆம் ஆண்டளவில், சிறு அளவிலான உணவு உற்பத்தியாளர்களின் விசேடமாக பெண்கள், ஆதிக் குடிகள், விவசாயக் குடும்பங்கள், கால்நடை வளர்ப்பாளர்கள் மற்றும் கடற்றொழிலாளர்கள் ஆகியோரின் விவசாய உற்பத்தித்திறனையும் வருமானத்தையும் இரட்டிப்பாக்கல்.

2.3.1 குறிகாட்டி

பாலினம் மற்றும் உள்நாட்டு நிலமைக்கு அமைய, சிறு அளவிலான உற்பத்தியாளர்களின் சராசரி வருமானம்.

இலக்கு 9 (கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்)

தாக்குப் பிடிக்கும் உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புதல், ஒருங்கிணைந்த மற்றும் நிலைபேறான கைத்தொழிலாக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் புத்தாக்கங்களை போஷித்தல்.

9.2 ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு

ஒருங்கிணைந்த மற்றும் நிலைபேறான கைத்தொழிலாக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் 2030 ஆம் ஆண்டளவில் தேசிய நிலமைக்கு அமைவாக கைத்தொழில் துறையில் தொழில்வாய்ப்பு பகுதியை மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியை குறிப்பிட்டளவு அதிகரித்தல் மற்றும் குறைவிருத்தி நாடுகளில் அதன் பங்கை இரட்டிப்பாக்கல்.

9.2.1 குறிகாட்டி

- மொத்த உள்நாட்டு உற்பத்தியினதும் ஆளுக்குரிய வருமானத்தின் விகிதாசாரமாக உற்பத்திப் பெறுமதி சேர்த்தல்.
- மொத்த ஊழியர் படையின் சதவீதமாக தொழில் உருவாக்கம்.

9.4 ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு

2030 ஆம் ஆண்டளவில் அனைத்து நாடுகளும் தமது ஆற்றலுக்கு அமைய செயற்பட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மீளுருவாக்க கைத்தொழில் வளர்ச்சி, வளப் பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் சுத்தமான மற்றும் சூழல் நேயமிக்க தொழில்நுட்பத்தையும் கைத்தொழில் செயற்பாடுகளையும் கூடுதலாகப் பயன்படுத்தல்.

9.4.1 குறிகாட்டி

பெறுமதி சேர்க்கப்பட்ட அலகுக்கு CO_2 வெளியேற்றம்

9.5 ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு

2030 ஆம் ஆண்டளவில் புத்தாக்கங்களை ஊக்குவித்தல் மற்றும் அரசாங்க மற்றும் தனிப்பட்ட ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திச் செலவினங்களுக்கான ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி ஊழியர்களின் எண்ணிக்கையை குறிப்பிட்டளவு அதிகரித்தல் உள்ளிட்ட 2030 ஆம் ஆண்டளவில் விசேடமாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் விஞ்ஞான ஆய்வுகளை விருத்தி செய்தல், கைத்தொழில் துறையில் தொழில்நுட்ப ஆற்றல்களை விருத்திசெய்தல்.

9.5.1 குறிகாட்டி

- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவிகிதமாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினங்களை மேம்படுத்தல்.
- ஒரு மில்லியன் குடித்தொகைக்கு ஏற்றவாறு ஆராய்ச்சியாளர்கள் (முழுநேர சமமான)

இலக்கு 12 - பொறுப்புணர்வுடனான பாவனை மற்றும் உற்பத்தி

நிலைபேறான பாவனை மற்றும் உற்பத்திப் போக்குகளை உறுதிசெய்தல்.

12.5 ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு

2030 ஆம் ஆண்டளவில், தடுத்தல், குறைத்தல், மீள்சுழற்சி மற்றும் மீள்பாவனை ஊடாக கழிவு உருவாக்கத்தை முடியுமான அளவு குறைத்தல்.

12.5.1 குறிகாட்டி

தேசிய மீள்சுழற்சி வீதம், மீள்சுழற்சி செய்யப்பட்ட பொருட்கள் டொன் அளவு.

12.7 ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு

தேசிய கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கு அமைய நிலைபேறான அரசாங்க பெறுகை நடைமுறைகளை மேம்படுத்தல்.

12.7.1 குறிகாட்டி

நிலைபேறான அரசாங்க கொள்கைகள் மற்றும் செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நாடுகளின் எண்ணிக்கை.

12 அ - ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்கு

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மிகவும் நிலைபேறான பயன்பாடு மற்றும் அபிவிருத்திப் போக்குகளை நோக்கிப் பயணிப்பதற்காக அவர்களின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப இயலளவை உறுதிப்படுத்த உதவுதல்.

12 அ - 1 குறிகாட்டி

நிலைபேறான பயன்பாடு மற்றும் அபிவிருத்தி மற்றும் சூழல் ரீதியில் சிறந்த தொழில்நுட்பத்திற்கான ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திக்காக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு கிடைக்கும் நிதியுதவிகளின் அளவு.

இலங்கை திரிபோஷ லிமிடட்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2023 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	31/12/2023	31/12/2022
	ரூபா.	ரூபா.
02. வருமானம்		
திரிபோஷா விற்பனை	2,468,681,435	740,056,360
சுபோஷ விற்பனை	1,146,606,048	680,256,519
கொடை செம்மையாக்கல் (குறிப்பு 2.1)	1,708,779,935	-
கெலரிபார் விற்பனை	4,360,160	-
ஹைலன்ட் உற்பத்தி விற்பனை	6,650,650	3,189,625
தேசிய உணவு ஊக்குவிப்பு சபையின் உற்பத்தி விற்பனை	963,910	520,120
எஸ்டிகே உற்பத்திகள் விற்பனை	1,038,185	-
இலங்கை பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் விற்பனை	394,640	-
பேக்கரி உற்பத்திகள்	2,622,500	481,290
மீள் போஷாக்கு பால்மா விற்பனை	-	35,872,750
	5,340,097,463	**1,460,376,665**
2.1 வழங்கப்பட்ட மூலப்பொருட்களின் நுகர்வு செம்மையாக்கல்		
உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட மூலப் பொருள் உ	1,125,606,386	
உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட மூலப் பொருள் உ	426,048,550	
எஸ்.ஏ.ஜீ.டி. கம்பனியினால் நன்கொடை (பால்மா)	157,125,000	
	1,708,779,935	
03. நுகர்வுக்கு தயார் நிலையிலுள்ள உற்பத்திச் செலவு		
2023.01.01 ஆம் திகதிக்கு நிறைவடைந்த உற்பத்திகள் (குறிப்பு 3.1)	40,812,800	46,570,967
நிறைவடைந் உற்பத்திகள் செம்மையாக்கல் (குறிப்பு 3.2)	(11,495,995)	9,276,326
2023.01.01 ஆம் திகதிக்கு செம்மையாக்கப்பட்ட மீதி	**29,316,805**	**55,847,293**
மொத்த உற்பத்திச் செலவு	4,488,344,771	1,448,592,669
2023.12.31 ஆம் திகதிக்கு நிறைவடைந்த உற்பத்திகள்	(83,166,770)	(106,552,464)
	4,434,494,806	**1,397,887,498**
3.1 2023.01.01 ஆம் திகதிக்கு செம்மையாக்கப்பட்ட முடிவுப் பொருட்கள்		
முடிவு உற்பத்திகள் பதியப்பட்ட பெறுமதி (இலாபநட்ட 2022.12.31	106,552,464	-
2022 இல் செம்மையாக்கப்பட்ட மீதி	(65,739,664)	-
முடிவு உற்பத்திகள் உண்மை மீதி 2023.12.31	**40,812,800**	**-**
3.2 நிறைவடைந்த உற்பத்திகள் பலவீனம் செம்மையாக்கல்		
பலவீனம் காரணமாக பெறுமதி குறைதல் - 2023	11,495,995	-
	11,495,995	**-**

04. விற்பனைச் செலவு

2023.01.01 ஆம் திகதி மீதி (குறிப்பு 4.1)	21,317,523	18,282,782
இருப்பு பொருட்கள் பலவீனம் (குறிப்பு 42)	(4,639,427)	-
2023.01.01 ஆம் திகதி செம்மையாக்கப்பட்ட மீதி	16,678,096	-
பால்மா விற்பனைச் செலவு	-	20,493,000
கெலரிபார் விற்பனைச் செலவு	2,988,291	-
கொள்வனவு - ஹைலண்ட் உற்பத்தி	5,359,046	2,792,580
கொள்வனவு - மத்திய உணவு ஊக்குவிப்பு சபையின் உற்பத்திகள்	863,548	733,922
கொள்வனவு - SDK உற்பத்திகள்	851,881	-
கொள்வனவு - இ.பெ.கூட்டுத்தாபன உற்பத்தி	355,450	-
கொள்வனவு - பேக்கரி பொருட்கள்	1,985,081	815,030
	29,081,393	43,117,314
2023.12.31 ஆம் திகதிக்கு மீதி	(1,334,298)	(26,810,929)
	27,747,095	**16,306,385**

	31/12/2023	**31/12/2022**
	ரூபா.	ரூபா.
4.1 203.01.01 திகதிக்கு செம்மையாக்கம் செய்யப்பட்ட முடிவுப் பொருள்		
முடிவுப் பொருள் பதியப்பட்ட பெறுமதி (இலாபநட்ட) 2022.12.31	26,810,929	-
2022 செம்மையாக்கல் பலவீனம்	(5,493,406)	-
முடிவுப் பொருள் உண்மைப் பெறுமதி (செ.நி) 2022.12.31	**21,317,523**	
4.2 முடிவுப் பொருள் பலவீனம் செம்மையாக்கல்		
பலவீனம் காரணமாக பெறுமதி குறைவு - 2023	4,639,427	-
	4,639,427	**-**
05 ஏனைய வருமானம்		
விரைவான விற்பனை	60,011,796	9,697,533
அசாதாரண விரைவான விற்பனை	-	6,117,450
மருத்துவ செலவுகள் மீள்ளிப்பு (இ.கா.கூ)	-	1,662,531
பால்மா மானியம் (உணவு ஆணையாளர் திணைக்களம்)	-	897,000
வாடகை வருமானம்	419,700	524,775
கடன் மீதான வட்டி வருமானம்	3,699,241	1,574,156
திறைசேரி உண்டியல்களுக்கான வட்டி (ரெபோ)	15,171,034	12,714,887
நிலையான வைப்புக்களுக்கான வட்டி	50,578,475	25,178,279
நிதிய முமைத்துவ கணக்கின் மீதான வட்டி	7,883,134	-
ஆவணக் கட்டணங்கள்	8,879,699	1,417,507
	146,643,079	**59,784,117**

06 விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள்

போக்குவரத்து அறவீடுகள்	571,147	89,788
விநியோகம்	10,784,191	1,196,955
வாகனப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு	6,038,159	3,763,071
காட்சிக்கூட செலவினங்கள்	311,863	318,009
அச்சிடல் மற்றும் விளம்பர செலவுகள்	21,354,154	3,555,389
சீருடைகள்	240,165	-
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	336,739	-
விற்பனை கொமிஸ் மற்றும் ஏனைய செலவுகள்	92,524	3,040
தேய்மானம்	4,074,400	4,074,400
	43,803,343	**13,000,652**

07. நிர்வாகச் செலவுகள்

சம்பளம்	11,294,090	11,836,521
ஊழியர் சேமலாப நிதியம்	2,136,079	2,202,166
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	427,416	440,463
மேலதிகநேரம்	6,768,223	3,823,046
கொப்பனவுகள்	7,013,091	5,359,356
அமைய சம்பளம்	-	138,000
அமய சம்பளம் மீதான ஊழியர் சேமலாப நிதியம்	-	30,000
அமய சம்பளம் மீதான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	-	4,500
சேவை நிலைய கொடுப்பனவு	-	104,694
முகாமைத்துவ கொடுப்பனவு	5,066,676	7,484,809
ஊழியர் நலன்புரி	1,268,705	2,844,762
வரி மற்றும் கூலி	641,445	14,829,295
அலுவலக உபகரண பராமரிப்பு	3,290,524	2,363,579
பாதுகாப்புக் கட்டணம்	9,209,992	7,725,326
மோட்டார் வாகனம் எரிபெருள்	2,054,532	1,339,349
பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு - வாகனம்	4,846,860	3,254,132
ஏனைய சேவைகள் மற்றும் பராமரிப்புகள்	97,860	339,607
ஆய்வுகூட செலவுகள்	2,472,233	1,525,831
தேனீர் மற்றும் பிற	117,857	226,479
காப்புறுதி	5,853,008	4,818,945
நிகழ்வு முகாமைத்துவ சேவை	656,301	592,983
காகிதாதிகள்	712,918	1,027,086
அஞ்சல் செலவுகள்	357,500	85,000
தொலைபேசிக் கட்டணங்கள்	538,252	484,353
ஊழியர் பயிற்சி	1,670,274	191,560
சட்ட மற்றும் தொழிற் கட்டணங்கள்	2,637,878	2,632,945
அனுபத்திர மற்றும் காப்புறுதிக் கட்டணங்கள்	1,718,997	1,369,810
சுகாதார மற்றும் நலத்துறை	522,931	544,162

பிரயாணக் கொடுப்பனவு	105,800	82,050
இலக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவுகள்	12,687,147	12,677,481
சீருடை - நிர்வாகம்	620,500	-
தேய்மானம்	4,523,090	4,816,997
	89,310,178	**95,195,285**

08. நிதி மற்றும் ஏனைய செலவுகள்

வங்கிக் கட்டணங்கள்	42,300	22,810
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு	76,433,720	-
கடந்த ஆண்டு வருமான வரிசெலுத்தல்	3,435,376	-
ஏனைய செலவினங்கள்	8,639	2,050
பெறுமதி குறைப்பு	25,801	71,233,070
வங்கி கடன் வட்டி (இலங்கை வங்கி)	-	445,955
கொடைகள்	348,588	112,500
	80,294,424	**71,816,385**

09. வருமான வரி செலவினங்கள்

நடப்பு வருமான வரிச் செலவினங்கள்	235,181,129	-
பின்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்	20,503,051	(25,735,350)
	255,684,180	**(25,735,350)**

10. கொள்வனவு

சோளம்	490,621,431	532,751,000
சோயா	643,410,012	354,388,441
பால்மா	626,405,807	154,392,516
கனியங்கள்	140,330,300	10,194,725
விற்றமின்	52,472,450	8,508,800
அரிசி	555,540	592,500
பொலித்தீன் ரீல்	113,906,848	39,035,937
கிராப்ட் காகிதப்பை	60,510,755	20,557,013
டுவைன்நூல்	446,015	-
சுபோஷ பொலித்தீன் ரீல்	58,993,034	45,442,867
சுபோஷ கிரேபெக் பொக்ஸ் போர்ட்	21,722,213	19,788,052
	2,209,374,406	**1,185,651,849**

11 மூலப் பொருட்கள் கொடை

சோளம்	1,290,523,430	68,042,160
சோயா	711,017,914	34,498,109
பால்மா	157,125,000	897,000
	2,158,666,344	**103,437,269**

சோளம் மற்றும் சோயா - சுகாதார அமைச்சு, நிதி அமைச்சின் கருத்திட்ட முகாமைத்தவப் பிரிவு, ஐக்கிய நாடுகளின் உலக உணவு திட்டம் மற்றும் வரையறுக்கப்பட்ட திரிபோஷா நிறுவன அதிகாரிகள் கையெழுத்திட்ட பல தரப்பு ஒப்பந்தத்தின்படி, உற்பத்திக்குத் தேவையான தரமான மூலப்பொருட்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு தேசிய திரிபோஷா திட்டத்திற்கு ஐக்கிய நாடுகளின் உலக உணவு திட்டம் நிதி உதவி வழங்க ஒப்புக் கொண்டுள்ளது. நிலையான செயல்பாட்டு நடைமுறையின்படி, தேசிய ஊட்டச்சத்து திட்டத்திற்கு ஆதரவாக சோளம் மற்றும் சோயாவின் மொத்த மானியங்களை வழங்க உலக உணவுத் திட்டம் ஒப்புக் கொண்டுள்ளது. அதுபற்றிய விரிவான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

பால்மா - சுகாதார அமைச்சு, சவுத் ஏசியா கேட்வே டெர்மினல்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் ஸ்ரீலங்கா திரிபோஷா கம்பனி லிமிடெட் ஆகியவற்றின் அதிகாரிகள் கையொப்பமிட்ட பலதரப்பு ஒப்பந்தத்தின்படி, ஒரு கி.கிராமுக்கு ரூ. 2,095/- அடிப்படையில் 75 மெ.தொ. பால்மாவை வழங்க சவுத் ஏசியா கேட்வே டெர்மினல்ஸ் பிரைவேட் லிமிடெட் ஒப்புக்கொண்டுள்ளது

2023.12.31 ஆம் திகதிய நிலவரப்படி, இலங்கை திரிபோஷ நிறுவனம் முறையே 1,255,475 கிலோகிராம் மற்றும் 1,362,115 கிலோகிராம் உட்கொள்ளாத சோளம் மற்றும் சோயாவை மீதி இருப்பு வைத்துள்ளது. எனவே, இது நிதி நிலை அறிக்கையில் ஒத்திவைக்கப்பட்ட வருவாயாக கருதப்பட்டது.

	1 கி.கி. விலை	வழங்கப்பட்ட / பெறப்பட்ட அளவு (கி.கி)	வழங்கலின் பெறுமதி
சோளம்	255.00	1,095,206	279,277,530
சோயா அவரை	397.00	299,833	119,033,701
சோயா அவரை	445.00	300,000	133,500,000
பால்மா	2,095.00	75,000	157,125,000
சோளம்	194.00	1,964,550	381,122,700
சோயா அவரை (மெ.தொ. 560)	243.98	509,464	124,299,027
சோளம்	182.50	2,000,000	365,000,000
சோளம்	192.00	1,380,850	265,123,200
சோயா அவரை (மெ.தொ. 1305)	230.55	1,307,496	301,449,186
சோயா அவரை	330.00	99,200	32,736,000
			2,158,666,344

	31/12/2023	31/12/2022
	ரூபா.	ரூபா.
12 நேரடி உழைப்பு மற்றும் முகாமைத்துவ செலவுகள்		
சம்பளம்	76,938,425	79,550,397
ஊழியர் சேமலாப நிதியம்	14,303,040	14,843,146
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	2,857,864	2,968,629
மேலதிகநேரம்	60,188,469	25,234,482
விசேடகொடுப்பனவு	31,902,459	33,015,390
பணிக்கொடை	4,647,286	3,716,378
சேவைத் தள கொடுப்பனவு	491,591	88,072
சீருடைகள் மற்றும் சலவை	10,823,970	5,703,003
தேனீர் மற்றும் பிற	10,628,418	6,027,281
முறைமாற்ற மற்றும் உணவுக் கொடுப்பனவு	3,483,890	1,152,463
சுகாதார மற்றும் நலத்துறை	1,984,930	1,044,664
அமய மற்றும் ஒப்பந்த சம்பளம்	2,685,842	2,507,212

அமய மற்றும் ஒப்பந்த சம்பளம் மீதான ஊழியர் சேமலாப நிதியம்	545,451	474,553
அமய மற்றும் ஒப்பந்த சம்பளம் மீதானஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	106,515	100,714
ஊழியர் நலன்புரிச் செலவு	1,402,012	70,738
ஊக்குவிப்பு கொடுப்பனவுகள்	15,390,731	15,676,787
	238,380,892	**192,173,910**

	31/12/2023	31/12/2022
	ரூபா.	ரூபா.
13 தொழிற்சாலை மேந்தலைச் செலவுகள்		
மின் பிறப்பாக்கி எரிபெருள்	113,642,807	30,911,643
பொறி மற்றும் இயந்திரங்கள் பராமரிப்பு	40,997,630	3,557,847
ஆய்வுகூட செலவுகள்	22,136,811	5,317,504
மின்சாரம்	78,394,472	21,839,712
கட்டிட பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு	6,040,372	848,622
வேறு சேவைகள் மற்றும் பராமரிப்பு	15,311,715	4,483,741
பூங்கா பராமரிப்பு	249,266	108,020
வாடகை செலவினம்	6,754,289	-
தேய்வு	80,451,242	55,255,191
	363,978,602	**122,322,279**

இலங்கை திரிபோஷ லிமிடட்
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்
2023 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

14 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

செலவு / மீள்மதிப்பு	2022.12.31 ஆம் திகதிக்கு மீதி	சீராக்கம் 2022	சேர்ப்பு 2023	2023.12.31 ஆம் திகதிக்கு மீதி
காணி	430,000,000	-	-	430,000,000
கட்டடம்	174,309,676	424,817	-	174,734,493
பொறித்தொகுதிகளும் இயந்திர சாதனங்களும்	597,111,725	-	36,312,862	633,424,587
மோட்டார் வாகனம்	37,372,000	-	-	37,372,000
உபகரணங்களும் கருவிகளும்	12,660,886	-	1,276,459	13,937,345
ஆய்வுகூட உபகரணங்கள்	10,189,130	-	38,553,947	48,743,077
மின்சார வேலைகள்	4,660,000	-	-	4,660,000
அலுவலக உபகரணங்கள்	9,131,746	-	1,220,295	10,352,041
தளபாடங்களும் பொருத்துகைகளும்	12,293,020	-	9,176,822	21,469,842
அருவச் சொத்துக்கள்	-	-	612,925	612,925
கணினி மற்றும் வன்பொருட்கள்	9,134,011	-	488,450	9,622,461
	1,296,862,195	**424,817**	**87,641,760**	**1,384,928,772**

திரண்ட பெறுமானத் தேய்வு	2022.12.31 ஆம் திகதிக்கு மீதி	சீராக்கம் 2022	சேர்ப்பு 2023	2022.12.31 ஆம் திகதிக்கு மீதி
கட்டடம்	23,332,500		8,736,725	32,069,225
பொறித்தொகுதிகளும் இயந்திர சாதனங்களும்	122,043,977		60,896,302	182,940,278
மோட்டார் வாகனம்	22,611,067		7,474,400	30,085,467
உபகரணங்களும் கருவிகளும்	4,843,192		2,680,018	7,523,210
ஆய்வுகூட உபகரணங்கள்	2,861,362		3,806,197	6,667,559
மின்சார வேலைகள்	2,796,000		932,000	3,728,000
அலுவலக உபகரணங்கள்	2,782,274		962,204	3,744,478
தளபாடங்களும் பொருத்துகைகளும்	3,024,997		1,539,369	4,564,366
அருவச் சொத்துக்கள்	-		25,539	25,539
கணினி மற்றும் வன்பொருட்கள்	6,768,186		1,995,978	8,764,164
	191,063,555	**-**	**89,048,731**	**280,112,286**

பதிவழிக்கப்பட்ட பெறுமதி	2022.12.31 ஆம் திகதிக்கு மீதி	2023.12.31 ஆம் திகதிக்கு மீதி
	ரூபா.	ரூபா.
காணி	430,000,000	430,000,000.00
கட்டடம்	150,977,176	142,665,268
பொறித்தொகுதிகளும் இயந்திர சாதனங்களும்	475,067,748	450,484,309
மோட்டார் வாகனம்	14,760,933	7,286,533
உபகரணங்களும் கருவிகளும்	7,817,695	6,414,135
ஆய்வுகூட உபகரணங்கள்	7,327,768	42,075,518
மின்சார வேலைகள்	1,864,000	932,000
அலுவலக உபகரணங்கள்	6,349,472	6,607,563
தளபாடங்களும் பொருத்துகைகளும்	9,268,023	16,905,476
அருவச் சொத்துக்கள்	-	587,386
கணினி மற்றும் வன்பொருட்கள்	2,365,825	858,297
	1,105,798,640	**1,104,816,486**

இலங்கை திரிபோஷ லிமிடட்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2023 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

	31/12/2023	31/12/2022
	ரூபா சதம்	ரூபா சதம்
15 கிடைக்க வேண்டிய ஊழியர் கடன்		
வீட்டுக் கடன் - நலன்புரி	29,587,581	-
வீட்டுக் கடன் - இடர்	20,155,739	-
	49,743,321	-
16 இருப்பு பொருட்கள்		
மூலப்பொருள்		
கோதுமை	337,781,847	118,245,268
சோயா	351,282,773	46,391,386
பால்மா	47,432,400	5,862,129
கனியங்கள்	7,196,875	10,354,700
விட்டமின்கள்	7,485,000	13,481,872
	751,178,894	**194,335,355**
திரிபோஷ பொதியிடல் பொருட்கள்		
பொலித்தீன் ரீல்	5,699,280	40,524,365
கிராப்ட் பைகள்	7,909,650	11,426,400
டுவின் நூல்	543,119	275,057
	14,152,049	**52,225,822**
சுபோஷ பொதியிடல் பொருட்கள்		
பொலித்தீன் ரீல்	17,544,037	26,680,520
கிராப்ட் பைகள்	4,075,550	10,244,218
கிரே பைகள் பொக்ஸ் போர்ட்	1,380,975	1,406,776
கம் டேப்	448,465	889,888
	23,449,027	**39,221,401**
வேறு		
பொறியியல் களஞ்சியம்	59,774,535	62,804,094
டீசல்	4,056,570	11,811,240
	63,831,105	**74,615,334**
செய்து கொண்டிருக்கும் வேலைகள்		
மூலப்பொருள்		
சோளம்	9,600,000	13,260,000
சோயா	4,003,962	11,932,630
பால்மா	-	3,153,677
கனியங்கள்	122,500	815,580
விட்டமின்கள்	547,453	470,421
தரிபோஷா பொதியிடல் பொருட்கள்		
பொலித்தீன் ரீல்	229,330	2,741,370
கிராப்ட் கடதாசி பைகள்	272,025	1,738,800
டுவைன் நூல்	4,719	8,315
சுபோஷா பொதியிடல் பொருட்கள்		
பொலித்தீன் ரீல்	313,171	1,614,340
அலைப் பைகள்	68,730	394,478
	15,161,890	**36,129,610**

முடிவுப் பெருட்கள் - திரிபோஷா (விற்பனைக்கு உகந்த)	68,227,232	2,354,210
முடிவுப் பெருட்கள் - திரிபோஷா (குறைப்பு செம்மையாக்கல்)	-	38,458,591
	68,227,232	**40,812,800**
முடிவுப் பெருட்கள் - சுபோஷா (குறைப்பு செம்மையாக்கல்)	-	8,127,086
சந்தைப்படுத்தல் பிரிவு		
முடிவுப் பொருட்கள் - சுபோஷ (விற்பனைக்கு உகந்த)	14,939,539	11,982,394
முடிவுப் பொருட்கள் - கலரி பார்	74,747	-
செய்து கொண்டிருக்கும் வேலைகள்	756,923	-
அங்காடி கையிருப்பு	502,628	1,208,043
	16,273,836	**13,190,437**
மொத்தம்	**952,274,033**	**458,657,846**

	31/12/2023	**31/12/2022**
	ரூபா சதம்	**ரூபா சதம்**
16.1 முடிவுப் பொருட்கள் - திரிபோஷா (குறைப்புடன் செம்மையாக்கல்)		
முடிவுப் பொருட்கள் கிரயம்	-	104,198,254
குறைப்பு காரணமாக பெறுமதி குறைப்பு	-	(65,739,664)
	-	**38,458,591**
16.2 முடிவுப் பொருட்கள் - சுபோஷா (குறைப்புடன் செம்மையாக்கல்)		
முடிவுப் பொருட்கள் கிரயம்	-	13,620,492
குறைப்பு காரணமாக பெறுமதி குறைப்பு	-	(5,493,406)
	-	**8,127,086**
17 வர்த்தகம் மற்றும் ஏனைய வரவேண்டியவைகள்		
கடனாளிகள்	204,065,974	37,890,778
கடனாளிகள் - விற்பனை	48,493,608	53,602,756
முற்பணம் மற்றும் முன் கொடுப்பனவு	5,461,074	3,669,157
கிடைக்க வேண்டிய வருமான வரி	800,000	600,000
காப்புறுதி வருமதிகள்	864,637	573,116
வைப்புக்கள்	2,126,000	2,126,000
வீட்டுக்கடன் - ஆதனக்கடன்	13,914,566	47,861,966
வீட்டுக்கடன் - இடர் கடன்	9,252,332	33,419,201
தற்காலிக நிவாரணக் கடன்	36,720	157,313
விசேட கடன்	35,658	-
கொவிட் 19 விசேட கடன்	-	3,214
விசேட இடர் கடன் - நலன்புரி	2,694,019	2,474,393
உற்சவ முற்பணம்	39,500	165,711
சுற்றுலா முற்பணம்	2,200	2,200
அறவிட வேண்டிய வெட் வரி	53,782,252	-
கிடைக்க வேண்டிய முற்பணம்	5,649,373	-
	347,217,913	**182,545,806**

செலுத்த வேண்டிய வருமான வரி

நட்டம் அடைந்த ஆண்டான 2022 ஆம் ஆண்டில், செய்யப்பட்ட முற்பண வருமான வரி செலுத்துதலைக் குறிக்கிறது. மேற்படி கொடுப்பனவை ஸ்ரீலங்கா திரிபோஷ கம்பனி லிமிடெட் நிறுவனத்திற்கு உரிய நேரத்தில் வரவு வைப்பதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் கணக்காய்வு நடத்தப்பட்டு வருகிறது.

அறவிட வேண்டிய வெட் வரி

புதிய வெட்வரி வழிகாட்டல்களுக்கு அமைய இலங்கை திரிபோஷா கம்பனியினால் உற்பத்தி செய்யப்படும் அனைத்து முடிவுப் பொருட்களும் 2024.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வெட் வரிக்கு உட்பட்டதாகும். 2023 ஆம் ஆண்டு முதல் 4 ஆவது தவணைக்கு ஏற்புடைய வரி சிட்டைகளுக்கு திரிபோஷா கம்பனிக்கு வெட்வரி உள்ளீடுகளை கோர முடியும். எனவே உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடிய பின்னர் மேற்படி செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

18 பணமும் பணத்திற்கு சமமானவையும்

இலங்கை வங்கி ஜாஎல 71324617	258,291,873	76,633,346
இலங்கை வங்கி ஜாஎல 80306903	281,410,988	52,111,523
சில்லறைக் காசு	20,000	-
திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடு 18.1	92,500,000	93,776,635
நிலையான வைப்புக்கள் மீதான முதலீடு 18.2	236,130,348	291,252,335
	868,353,209	**513,773,838**

நிதிய முகாமைத்துவக் கணக்குகள் (91400366 மற்றும் 91400437)

இலங்கை திரிபோஷா கம்பனியின் பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட பின்னர் நடைமுறைக் கணக்குகளில் செய்யப்பட்டுள்ள முதலீடு செய்யப்பட்டுள்ள மேலதிக நிதியங்களைக் கருத்திற்கொண்டு 2023 ஆகஸ்ட் மாதத்தின் இறுதியில் நிதி முகாமைத்துவக் கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன.

18.1 திறைசேரி பிணைமுறிகளில் முதலீடு - மீள் கொள்வனவு ஒப்பந்தம்

CDS கணக்கு	எடுத்த தொகை 31/12/2023 ஆம் திகதிக்கு	எடுத்த தொகை 31/12/2022 ஆம் திகதிக்கு
RET-Y107471000 - 01	71,500,000	71,596,250
RET-Y107471000 - 02	21,000,000	22,180,385
	92,500,000	**93,776,635**

18.2 நிலையான வைப்புக்களில் முதலீடு

கணக்கிலக்கம்	எடுத்த தொகை 31/12/2023 ஆம் திகதிக்கு	எடுத்த தொகை 31/12/2022 ஆம் திகதிக்கு
89182568	-	208,464,038
90205288	28,387,387	-
90205292	28,387,387	-
90205295	28,387,387	-
90205303	28,387,387	-
90205412	28,387,387	-
83258807	8,546,313	7,494,928
82420963	6,728,032	5,884,468
81508819	25,762,497	22,496,945
81048092	6,993,549	6,143,391
80940675	17,689,864	15,560,588
80871912	19,321,454	17,216,307
80586829	9,151,703	7,991,669
	236,130,348	**291,252,335**

* மேற்படி வைப்புக்கள் இலங்கை வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

19 வெளிப்படுத்தப்பட்ட மூலதனம்

பங்கு மூலதனம்	304,600,000	304,600,000
	304,600,000	**304,600,000**

அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் திரிபோசா கம்பனியின் முகாமைத்துவம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட முழுமையாக அரசுடமையாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது' இதற்கமைவாக 304,600,000/- ரூபாவைக் கொண்ட வெளிப்படுத்தப்பட்ட மூலதனத்துடன் 2010 செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷா கம்பனியானது தாபிக்கப்பட்டது'

20 மூலதன இருப்புகள்

ஆண்டின் தொடக்கத்தில் மீதி	407,750,516	407,750,516
ஆண்டிறுதியில் மீதி	**407,750,516**	**407,750,516**

21 ஒதுக்கங்களின் மீள் பெறுமதியிடல்

ஆண்டின் தொடக்கத்தில் மீதி	518,157,038	511,096,168
மீள்மதிப்பு சீராக்கம்		7,060,870
ஆண்டிறுதியில் மீதி	**518,157,038**	**518,157,038**

22 ஓய்வூதிய நலன்கள்

ஆண்டின் தொடக்கத்தில் மீதி	79,162,809	78,690,831
கழிக்குக: ஆண்டில் செய்யப்பட்ட கொடுப்பனவுகள்	(5,561,625)	(3,244,400)
2023 ஆண்டிற்கான நிதி ஏற்பாடு	4,647,286	3,716,378
ஆண்டிறுதியில் மீதி	**78,248,470**	**79,162,809**
பணிக்கொடை தற்போதைய பகுதி	(5,306,061)	-
	72,942,409	**79,162,809**

கழிவு வீதம்	8%	8%
எதிர்கால சம்பளவேற்ற வீதம்	10%	10%
பதவியணி சுழற்சி	2%	2%
ஓய்வுபெறும் வயது	60 வருட	60 வருட

	31/12/2023 ரூபா சதம்	31/12/2022 ரூபா சதம்
23 மருத்துவ நிதியம்		
ஆண்டின் தொடக்கத்தில் மீதி	435,786	433,945
ஆண்டில் பங்களிப்பு	208,740	221,340
ஆண்டில் செய்யப்பட்ட கொடுப்பனவு	(330,300)	(219,499)
ஆண்டிறுதியில் மீதி	**314,226**	**435,786**
24 பிற்போடப்பட்ட வருமானம்		
உணவுப் பொருட்கள் - உலக உணவு ஸ்தாபனம்	552,426,677	102,540,269
	552,426,677	**102,540,269**
25 வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்		
கடன் தருநர்	116,596,939	209,866,983
சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கு	465,348	2,559,599
பணிக்கொடை தற்போதைய பகுதி	5,306,061	-
வெட் செலுத்த வேண்டியது	180,620	-
பங்கிலாபம் செலுத்த வேண்டியது	-	10,000,000
வருமான வரி செலுத்த வேண்டியது	231,818,213	-
செலுத்த வேண்டிய சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு	6,586,059	2,753,338
வைப்பு செலுத்த வேண்டியது	56,599,988	52,848,238
	417,553,229	**278,028,157**
26 முன்னைய ஆண்டு செம்மையாக்கல்		
செலுத்த வேண்டிய வைப்புக்கள்	25,000	-
நிலையான வைப்புக்கள்	17,313,010	-
பொறியியல் கையிருப்பு	-	3,398,232
மூலதனச் செலவுகள்	(424,817)	253,832
மீண்டுவரும் செலவுகள்	(698,360)	4,491,219
திரிபோஷ முடிவுப் பொருட்களை குறைவாக மதிப்பிடல்	11,495,995	9,276,326
குறைவு காரணமாக பெறுமதி குறைப்பு - சுபோஷா	4,639,427	-
நிலுவை சீராக்கம்	-	259,022
முத்திரைக் கட்டணம்	-	100
	32,350,255	**17,678,732**

27 மூலதன கொடை சம்பந்தமான பெறுமானத் தேய்வு.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் சம்பந்தமான பெறுமானத்தேய்வு" இந்த ஆண்டின் மொத்த பெறுமானத்தேய்வுக் கட்டணத்தை குறைத்துக் கொண்டு உரிய மூலதனக் கொடை கணக்கிற்கு அறவிடப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் மூலதனக் ஏற்பாட்டுக்கு ஏற்புடைய செம்மையாக்கல் செய்யப்படவில்லை.

28 பொறுப்புகளும் எதிர்பார்க்கப்படாதவைகளும்

அறிக்கையிடப்பட்ட திகதியில் எவ்வித வெளித்தெறியும் பொறுப்புகளோ அல்லது எதிர்பார்க்காத நிகழ்வுகளோ நடைபெறவில்லை.

29 தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள்

பிரதான முகாமையாளர்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள்

கம்பனியின் பிரதான முகாமையாளர்கள் அதன் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் ஆவர். 2023 ஆம் ஆண்டு கலந்துகொள்ளும் கொடுப்பனவு மற்றும் போக்குவரத்து கொடுப்பனவாக பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு முறையே ரூ.622,500 மற்றும் ரூ.103,500 தொகை செலுத்தப்பட்டுள்ளது.

30 நிதி அபாய முகாமைத்துவம்

கம்பனிகளின் நடவடிக்கைகள் பின்வரும் பல்வேறுபட்ட நிதி அபாயங்களுக்கு உட்படக்கூடியன.

(அ) சந்தை அபாயம் (சந்தை அபாயம் மற்றும் அன்னியச் செலாவணி அபாயம் உட்பட)

(i) அன்னியச் செலாவணி ஆபத்து

கம்பனியானது அன்னியச் செலாவணி ஏற்றஇறக்கங்களுக்கு உட்படக்கூடியது. பிரதானமாக ஐக்கிய அமெரிக்க டாலருக்கு ஒப்பீட்டளவில் இலங்கை ரூபாவின் பெறுமதி ஏற்றஇறக்கத்திற்கு உள்ளாகின்றது. கம்பனியின் செயற்பாட்டு பண அலகு இலங்கை ரூபாவாகும். அதன் மூலமே அதிகமான கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுகின்றன. ஏனைய அனைத்து நிதி அலகுகள் நிதி அறிக்கையிடும் செயற்பாட்டுக்காக வெளிநாட்டுப் பணமாக கருதப்படும்.

(ii) வட்டி வீதி அபாயம்

சபையின் வட்டி வீத அபாயம் என்பது சந்தை வட்டி விகிதங்களின் மாற்றங்கள் காரணமாக நிதிக் கருவிகளின் சாதாரணப் பெறுமதிக்கு அல்லது எதிர்கால நிதிப் பாய்ச்சல் ஏற்றஇறக்கங்கள் நிகழுவதற்குரிய அபாயமாகும். கம்பனி தனது வட்டி வீத அபாயத்தை முகாமை செய்வது நிதிப் பாய்ச்சலை அவதானித்தல் மற்றும் முகாமை செய்வதற்காக கடன் பெறுவதற்கு சாதகமான வீத்தை கலந்துரையாடுவதன் மூலமாகும்.

(ஆ) கடன் அபாயம்

கம்பனி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதே நேரம் வாடிக்கையாளர்களுக்கு கடன் வசதியையும் வழங்குகின்றது. எனவே, வியாபாரக் கடன்களை செலுத்தாமை, வர்த்தகத்தின் மூலம் கிடைக்க வேண்டிய நிதி தொடர்பான பிரதான அபாயமாகும்.

கடன் அபாயத்திற்கு உட்படுதல்

சாதாரணமாக கடன் அபாயத்திற்கு உட்படக்கூடிய நிதிச் சொத்துக்களின் உச்ச அபாயத்திற்கு உட்படுகின்றது. அவற்றின் காவும் பணத்திற்கு சமனாகும். பின்வரும் அட்டவணை மூலம் அபாய இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

	31/12/2023	31/12/2022
	ரூபா சதம்	ரூபா சதம்
வர்த்தக மற்றும் வேறு செலுத்த வேண்டியவை	347,217,913	182,545,806
காசும் சாசுக்க சமனானவையும்	868,353,209	513,773,838
மொத்தக் கடன் அபாயத்திற்க உட்படல்	**1,215,571,122**	**696,319,644**

(இ) திரவத்தன்மை அபாயம்

காசு அல்லது வேறு நிதிச் சொத்துக்கள் வழங்குவதன் மூலம் கழிப்பனவு செய்யப்படும் நிதிப் பொறுப்புக்களுடன் தொடர்புடைய கடப்பாடுகளை தீர்க்கும் போது கம்பனியினால் முகம் கொடுக்க நேரிடும் ஆபத்து இதுவாகும்.

கம்பனியின் மொத்த அபாய முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம், சந்தை எதிர்வுகூற முடியாது என்ற விடயம் குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது. அதன் மூலம் கம்பனியின் நிதிச் செயற்பாட்டுக்கு ஏற்படக்கூடிய எதிர்மறையான தாக்கத்தைக் குறைத்துக்கொள்ள முயற்சி எடுக்கப்படுகின்றது.

31 ஏனைய தொடர்புடைய வெளிப்படுத்தல்கள்

31.1 இலங்கை திரிபோஷ கம்பனியுடன் தொடர்புடைய கையிருப்பு வகைகள்

அடிப்படை எடுகோள்கள்

தெரிவு செய்யப்பட்ட மூலப் பொருள் சோளம்

ஒரு தடவைக்கு கொள்முதல் எல்லை - LKR.500 Mn (அதிகாரம் DPC)

மதிப்பீடு விலை ஒரு Kg - LKR.250/=

தற்போதைய RM கொள்ளளவு (மொத்தம் 1,250 MT) சோளம் 900,000 KG

அதிகூடிய எடுகோள் (KG)		90,000	ஒரு நாளைக்கு
குறைந்த எடுகோள் (KG)		50,000	ஒரு நாளைக்கு
சராசரி / குறைந்த எடுகோள் (KG)		70,000	ஒரு நாளைக்கு
மீளமைப்பு காலப் பிரிவு (நாட்கள்)	30-60		
சாதாரண பதிவு காலப் பிரிவு (நாட்கள்)	30		
மீளமைப்புஅளவு (KG)		2,000,000	
ஒரு வருடத்தில் மீளமைப்பு		9	
வருடத்திற்கான மொத்த தேவைப்பாடு (KG)		18,000,000	

மீளமைப்பு மட்டம்= அதிகூடிய எடுகோள் x அதிகூடிய மீளமைப்பு காலம்

5,400,000 KG

குறைந்த கையிருப்பு மட்டம் = மீளமைப்பு மட்டம்। - (சாதாரண எடுகோள் x சாதாரண மீளமைப்பு காலம்)

3,300,000 KG

அதிகூடிய கையிருப்பு மட்டம் = மீளமைப்பு மட்டம் + மீளமைப்பு அளவு

5,900,000 KG

குறிப்பு : தற்போது RM சேமிப்புத் திறன் இல்லாத காரணத்தினால் நிறுவனத்தால் பங்கு நிலைகளுக்கு மேல் உற்பத்தி செய்ய முடியவில்லை.

31.2 2023.12.31 ஆம் திகதிக்கு கழிவுப் பொருட்களின் மீதி.

2023.12.31 ஆம் திகதிக்கு கழிவுப் பொருட்களின் மீதி.	அளவு	மதிப்பிடப்பட்ட விற்பனை விலை	மதிப்பிடப்பீட்டுத் தொகை
கழிவுத் தூள் (கி.கி.)	966	93.20	90,031
சீ.எஸ்.பீ. உலர்ந்த (கி.கி.)	2,666	62.00	165,292
சோயா அவரை (கி.கி.)	1,972	58.00	114,376
சோளம் தோல் (கி.கி)	935	28.00	26,180
பயன்படுத்தப்பட்ட பொலிபேக்	35,000	19.75	691,250
		மொத்தம்	**1,087,129**

இந்தக் கையிருப்பு குறைந்த மதிப்பீட்டுப் பொருட்களாக விநியோகிக்க முடியும் என்பதால் மேற்படி தொகை வருடத்தின் இறுதியில் கையிருப்பு மதிப்பீட்டுக்கு எடுக்கப்படுவதில்லை. எனவே, அவற்றை விற்பனை செய்யும் போது கம்பனி அதன் உண்மையான பெறுமதிக்கு அடையாளம் காணப்படும்.

31.3 2023 ஆம் ஆண்டில் பங்கிலாபம் செலுத்தல்

	ரூ.
2021/2022/2023 நிதியாண்டுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம்	65,000,000
	65,000,000

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல : MED/B/SLTL/01/2023/41 **திகதி : 2024 ஜூலை 24 ஆம் திகதி**

தவிசாளர்,

ஸ்ரீ லங்கா திரிபோசா லிமிட்டட்

இலங்கை திரிபோசா கம்பனியின் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வேறு சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் அடிப்படையிலான கணக்காய்வாளரின் அறிக்கை

---

1. <u>நிதிக் கூற்றுக்கள்</u>

1.1 அபிப்பிராயம்

இலங்கை திரிபோஸ கம்பெனியின் 2023 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள், சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. ஆரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, கம்பெனியின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2023 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தர நியமம் படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

1.3 கம்பனியின் 2022 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

ஏற்புடைய ஏனைய தகவல்கள் கம்பனியின் 2023 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பிலான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், அந்தத் தகவல்கள் கணக்காய்வு அறிக்கை திகதியின் பின்னர் எனக்கு கிடைக்கவுள்ளது.இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் எனது அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் உள்ளடங்காது. நான் அது தொடர்பில் எவ்வித அத்தாட்சிப்படுத்தலையோ அல்லது அபிப்பிராயத்தையோ சமர்ப்பிக்கவில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் எனது கணக்காய்வுக்கு அமைய எனது பொறுப்பாவது மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடனோ அல்லது கணக்காய்வின் போதோ அல்லது வேறு முறையிலோ பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கு அமைய எண்ணிக்கை அளவில் வித்தியாசம் உண்டா என்பது தொடர்பில் பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

என்னால் கம்பனிக்கு உரிய 2023 வருடாந்த அறிக்கையை வாசிக்கும் போது அங்கு எண்ணளவில் பிழையான பிரகடனங்கள் உள்ளதென நான் தீர்மானிக்குமிடத்து, அவற்றை சரிசெய்வதற்காக ஏற்புடைய நிறுவனத்தின் நிர்வாகம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்களிடம் அந்த விடயங்களை எத்திவைக்க வேண்டியது எனது பொறுப்பாகும். மேலும் எண்ணளவில் சரிசெய்யப்படாத பிழையான கூற்றுக்கள் இருப்பின் அவை அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய உரிய காலத்தில் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பெனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்-கொள்வதற்காகவேயன்றி கம்பெனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கம்பெனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பெனியின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பெனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வகிக்கும் தரப்பினர்களை அறிவூட்.டுகின்றேன்.

2. வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 2007 இல 07 எனும் கம்பனிகள் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2007 இல 07 எனும் கம்பனிகள் சட்டத்தின் 163(1) பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேதவைப்பாடுகளுக்கு அமைய கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு, எனது விசாரணையின் போது தெரியவந்த விடயங்களுக்கு அமைய கம்பனி உரிய முறையில் நிதி அறிக்கைகளைப் பேணிவந்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணங்குகின்றன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் எடுக்கப்பட்ட சாட்சியங்களின் மீது மற்றும் எண்ணிக்கை அளவிலான விடயங்களுக்கு வரையறுத்து பின்வரும் கூற்றுக்களை குறிப்பிடுவதற்கு ஏதும் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் ஆளுகை சபையின் எவரேனும் அங்கத்தவருக்கு கம்பனி தொடர்பில் ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடி அல்லது வேறு வகையில் சாதாரண வியாபார நிலமைக்கு அப்பால் தொடர்பு உள்ளது.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த ஏதேனும் ஏற்புடைய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டுச் சபையினால் வெளியிடப்படும் வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைய செயற்படவில்லை.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கு தொடர்பு	அவதானிப்புக்கள்
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் viii ஆம் அத்தியாயத்தின் 10.1 பிரிவு மற்றும் xii ஆம் அத்தியாயத்தின் 7.2 மற்றும் 7.3 பிரிவுகள்.	அவசரக் கடமைகள் தொடர்பாக சனி, ஞாயிறு அல்லது பொது விடுமுறை நாட்களில் பணிபுரிய நியமிக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர், அத்தகைய வேலையின் ஒவ்வொரு நாளுக்கும் ஒருங்கிணைந்த மாதச் சம்பளத்தில் 1/20 ஐப் பெறுவதற்கு ஒரு நாளைக்கு 08 மணிநேரத்திற்குக் குறையாமல் பணியாற்ற வேண்டும். 08 மணிநேரம் வேலை செய்யாத உத்தியோகத்தர்களுக்கு ரூ.1,615,088 மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் விடுமுறைக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. கைரேகை இயந்திரத்திலிருந்து பெறப்பட்ட தரவுகளின்படி, அந்தந்த விடுமுறை நாட்களில் சில அதிகாரிகள் கடமைக்கு சமூகமளிக்கவில்லை, ஆனால் அந்த நாட்களிலும் இந்த கொடுப்பனவு எடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு வேலைக்கு ஒரு கொடுப்பனவு / சலுகை மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் என்றாலும், இந்த கொடுப்பனவுக்கு கூடுதலாக, நிறுவனம் ஒவ்வொரு வேலை விடுமுறைக்கும் ஒரு இழப்பீட்டு விடுமுறை அல்லது இழப்பீட்டு விடுமுறை கொடுப்பனவை வழங்கியுள்ளது. அதற்கு ரூ.477,019 செலுத்தப்பட்டுள்ளது.

(ஆ) 2021 நவம்பர் 16 ஆந் திகதி அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அரசாங்க தொழில்முயற்சிகளுக்கான நிறுவகரீதியான வழிகாட்டிக் கோவை மற்றும் செயற்பாட்டுக் கையேடு

(i) வழிகாட்டிக் கோவையின் ii ஆம் பந்தி	குறைந்தபட்சம் மாதம் ஒரு முறை பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்றும், கூட்டத்தை பௌதீக ரீதியாக நடத்த முடியாதபோது, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடத்த வேண்டும் என கூறப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டுக்கு 10 பணிப்பாளர் சபை கூட்டங்கள் மாத்திரம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
(ii) செயற்பாட்டுக் கையேட்டின் 4.2 (h) ஆம் பந்தி	கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும் என்றாலும், 2023 ஆம் ஆண்டில் 3 கூட்டங்கள் மாத்திரமே திரிபோஷா கம்பனியுடன் நடத்தப்பட்டன.
(iii) செயற்பாட்டுக் கையேட்டின் 3.2 (v) ஆம் பந்தி	ஊக்குவிப்பு படிகளைச் செலுத்தும் போது அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி சுபோச விற்பனையிலிருந்து இலக்கிடப்பட்ட படியாக கம்பனியின் அனைத்து ஊழியர்களுக்குமாக மீளாய்வாண்டின் போது ரூபா 12,687,147 ஊக்குவிப்பு படிப்பணம் செலுத்தப்பட்டது.
(iv) செயற்பாட்டுக் கையேட்டின் 3.3 ஆம் பந்தி	ஒவ்வொரு பிரிவினதும் பணியாளர் தேவை மற்றும் நிறுவன விளக்கப்படம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு மூலோபாய மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்றாலும் கம்பனி அதற்கமைய நடவடிக்கை எடுக்கவில்லை.
(v) செயற்பாட்டுக் கையேட்டின் 3.6 ஆம் பந்தி	கம்பனியினால் மூலோபாயத் திட்டம், செயல் திட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பயனுள்ள செயலாற்றுகை மதிப்பீட்டு முறை அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். மேலும் ஒவ்வொரு பணியாளரின் செயலாற்றுகை உடனடி மேற்பார்வையாளரால் மதிப்பிட வேண்டும் என்றாலும், மூன்றாம் நிலை மற்றும் சிரேட்ட மட்டங்களுக்கான செயலாற்றுகை மதிப்பீடு எதுவும் நடத்தப்படவில்லை என்பது எழுமாற்று கணக்காய்வின் போது தெரியவந்தது.

(இ)	2008 டிசம்பர் 31 ஆம் திகதிய 30/2008 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை	இந்தச் சுற்றறிக்கையை கம்பனியின் ஊழியர்களுக்கு ஏற்புடையதாக கொள்ள முடியாத போதும் கம்பனியின் ஊழியர்களுக்கு இந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வுக்குரிய வருடத்தில் ரூ.5,339,402 இடர் கடன் செலுத்தப்பட்டிருந்தது.
(ஈ)	2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ii ஆம் பந்தி	சம்பளம் மற்றும் படிகள் தொடர்பாக தீர்மனம் எடுக்கும் அதிகாரம் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்படவில்லை என்பதோடு, மேலதிக கொடுப்பனவுகளாக மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து படிகளுக்குமாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் 2017 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்ட சுபோச உற்பத்திக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட சந்தைப்படுத்தல் முகாமையாளருக்கு ரூபா 10,000 மேலதிக படியானது சுபோச கணக்கிலிருந்து பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 120,000 தொகை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் அனுமதியின்றி செலவு செய்யப்பட்டிருந்தது.
(உ)	2019 சனவரி 12 ஆம் திகதிய இல. DMA/1 – 2019 எனும் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கை மற்றும் நிதி ஒழுங்கு விதிகள் 133 மற்றும் 134	மீளாய்வுக்குரிய வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட உள்ளக கணக்காய்வுகளுக்கு ஏற்புடைய அறிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவில்லை.
(ஊ)	இல. DMS/E4/13/08/413/1 மற்றும் 2013 மார்ச் 28 ஆம் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல. 30	நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின்படி, அனைத்து சேவைப் பிரிவுகளுக்கான பதவி உயர்வுக்கான (தரம் III முதல் தரம் II மற்றும் தரம் II முதல் தரம் I வரை) வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் மற்றும் தொடர்புடைய மட்டத்தின் இரண்டாவது அரசகரும மொழியில் தேர்ச்சி குறிப்பிடப்பட்டாலும், அங்கீகரிக்கப்பட்ட ஆண்டிலிருந்து, நிறுவனத்தினால் அனைத்து ஊழியர்களுக்கும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் இரண்டாவது அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதன்படி, மேற்கூறிய முன்நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமல் உரிய நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் மற்றும் சேவை நிரந்தரமாகல்கல் செய்யப்பட்டிருந்தன.

(எ)	2022 ஜனவரி 18 ஆம் திகதிய இல. 02/2022 எனும் அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை.	2019 மார்ச் 14 முதல் தொலைபேசி கொடுப்பனவுகளுக்கு தகுதியற்ற நிறுவனத்தின் மூன்றாம் நிலை அதிகாரிகளுக்கும் (JM 1-1) ரூ.1,000 தொலைபேசி கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. MA 1-1 மற்றும் MA 2 -1 பதவிகளில் பணிபுரியும் 07 அதிகாரிகளுக்கும் 2019 ஜூலை 15 முதல் மாதாந்த தொலைபேசி உதவித்தொகை ரூ.1,000 பணிப்பாளர் சபையின் ஒப்புதலின் அடிப்படையில் வழங்கப்பட்டது.
(ஏ)	2022 சனவரி 14 ஆம் திகதிய 01/2015 (ஐ) எனும் அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை.	எரிபொருள் கொடுப்பனவு HM சம்பள தர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே வழங்க முடியும் என்றாலும், பரிசீலனைக்கு உட்பட்ட வருடத்தில் 05 MM சம்பள தர அதிகாரிகளுக்கு தலா 20,000 ரூபா வீதம் போக்குவரத்து கொடுப்பனவாக 1,200,000 ரூபாவை திரிபோஷ நிறுவனம் செலுத்தியுள்ளது.
(ஐ)	2016 ஒக்டோபர் 21 ஆம் திகதிய இல. 2016/02(i) எனும் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை.	நிறுவனத்தின் HM1-1 சேவைப் பிரிவைக் கொண்ட இரண்டு சீரேட்ட நிலை அதிகாரிகளுக்கு 2020 ஆம் ஆண்டு முதல் அனுமதியின்றி HM1-2 சேவைப் பிரிவின் கீழ் சம்பள ஏற்றம் வழங்கப்பட்டுள்ளது.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த ஏதேனும் ஏற்புடைய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டுச் சபையினால் வெளியிடப்படும் வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைய செயற்படவில்லை.

(அ) உத்தேச சயிலோ முறைமையை நிர்மாணிப்பதற்காக ரூபா 192,091,525 மொத்த தொகை உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தினால் (WFP) 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தத் தொகை நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டது. 2023 ஜனவரி 02 ஆம் திகதிய நிலவரப்படி, அதன் முதிர்வுப் பெறுமதி ரூ.207,815,400 தொகை ஜனவரி 20 ஆம் திகதி பணமாக்கப்பட்டது. அதில் ரூ.125,000,000 , 2023 ஜனவரி 27 ஆம் திகதி மீண்டும் முதலீடு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், இந்த நிதியை வழங்குவதன் நோக்கத்தை நிறைவேற்றாமல் வேறு நோக்கங்களுக்காக இந்த நிதி செலவிடப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும், 18 நாட்களுக்கு இந்தத் தொகைக்கு வட்டி எதுவும் பெறப்படவில்லை, மேலும் 07 நாட்கள் மறு முதலீட்டிற்காக செலவிடப்பட்டது.

2.3 வேறு விடயங்கள்

(அ) கம்பனியினால் ரூ.மில். 3,555.6 மூலப்பொருட்கள் செலவினம், ரூ.மில். 602.3 நேரடிச் செலவினம் மற்றும் ரூ.மில். 50.7 சம்பளம் நிர்வாகச் செலவுகள் திரிபோஷா மற்றும் சுபோஷா வீதத்தின் அடிப்படையில் (80 சதவீதம் மற்றும் 20 சதவீதம்) விநியோகம் செய்யப்பட்டதோடு, விற்பனை விற்பனை மற்றும் விநியோகம் ஆகியவற்றின் அடிப்படையில் திரிபோஷா மற்றும் சுபோஷா தயாரிப்புகளுக்கு இடையே 49 மற்றும் 51 சதவீதம் என்ற விகிதத்திலும் நிர்வாக செலவுகள் 92 மற்றும் 8 சதவீதம், நிதிச் செலவுகள் 65 மற்றும் 35 சதவீதம் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையிலன்றி விநியோகிக்கப்பட்டிருந்த காரணத்தினால் திரிபோஷா உற்பத்திச் செலவை கணக்கிடுவதற்கு பின்பற்றப்பட்ட முறை காரணமாக திரிபோஷா தயாரிப்பு செலவின் உண்மைத் தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) 2022 ஆம் ஆண்டில் திரிபோஷா மீண்டும் திருப்பி அனுப்பப்பட்ட காரணத்தினால் ரூ. 11,701,601 தொகை சுகாதார அமைச்சிற்குச் செலுத்தப்பட வேண்டும் என அடையாளம் காணப்பட்டது, ஆனால் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் உரிய தொகை செலுத்தப்படவில்லை.

(இ) கம்பனியின் சங்க யாப்பின் பிரகாரம் இலங்கையில் தாய் மற்றும் சிசு ஊட்டச்சத்தின்மையைக் குறைப்பதற்காக, மேலதிக உணவுப் பொருட்களுக்கான வசதிகளை இலங்கை வழங்க வேண்டும் மற்றும் வருடாந்த திரிபோஷா தேவையை மதிப்பீடு செய்து அவற்றை வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, குடும்ப சுகாதாரப் பணியகம் வழங்கிய தரவுகளின் அடிப்படையில், ஆண்டுதோறும் திரிபோஷா உற்பத்திக்கான வருடாந்த உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டது, ஆனால் அது நிறுவனத்தின் பணிபாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், தயாரிக்கப்பட்ட உற்பத்தித் திட்டத்தின்படி, வருடாந்தம் 795,036 பயனாளிகளுக்கு திரிபோஷா வழங்குவதற்காக, பராமரிப்பு மற்றும் விடுமுறை நாட்களைத் தவிர்த்து 282 நாட்களில் உற்பத்திப் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும், வருடத்தின் உண்மையான உற்பத்தி நாட்களின் எண்ணிக்கை 211 ஆகும். அதற்கிணங்க, மாதாந்த திரிபோஷ தேவை தொடர்பில் உற்பத்தி நடவடிக்கைகள் நிறைவடைந்த மாதங்களின் எண்ணிக்கை 03 மட்டுமே. மேலும், கம்பனி தயாரித்துள்ள உற்பத்தித் திட்டத்தின்படி, சுபோஷா மற்றும் கலோரி பிஸ்கட் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களின் அளவு குறிப்பிடப்படாத காரணத்தினால் உற்பத்தித் தேவைக்கு தேவையான மூலப்பொருட்களை அடையாளம் காண முடியவில்லை. எனவே, சுபோஷா மற்றும் கலோரி பிஸ்கட்டுகளுக்கு திரிபோஷாவின் தேவைக்காக மதிப்பிடப்பட்ட பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின் நோக்கம் அடையப்படவில்லை.

(ஈ) 2023 ஆம் ஆண்டில், நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட முடிக்கப்பட்ட பொருட்களின் மொத்த அளவு 9,163,067 கிலோ ஆகும், இதில் 80 சதவீதம் அதாவது, 7,341,728 கிலோ மட்டுமே திரிபோஷா மற்றும் மீதமுள்ள 20 சதவீதம் அதாவது 1,821,339 கிலோ சுபோஷ உற்பத்தி செய்யப்பட்டது. சுகாதார அமைச்சினால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட முன்னுரிமைப் பணியானது 62 வீதமாக எட்டப்பட்டபோது, மொத்த உற்பத்தியில் 20 வீதமான சுபோஷாவை உற்பத்தி செய்திருப்பது நிறுவனத்தை நிறுவியதன் அடிப்படை நோக்கத்திற்கு இணங்கவில்லை என்பது தெரியவந்தது.

(உ) நிறுவனத்தை நிறுவுவதன் முக்கிய நோக்கம் திரிபோஷாவை விட சுபோஷாவை உற்பத்தி செய்வதில் நிறுவனம் அதிக கரிசனை காட்டுகின்றது என்பதும், இந்த நிலைமை முக்கிய காரணம் சுபோஷா விற்பனை வருமானத்தின் அடிப்படையில் இலாபத்தில் 5 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை இலக்கு கொடுப்பனவை செலுத்துவதற்கு கம்பனி தீர்மானித்திருப்பது கண்டறியப்பட்டது. மேலும், இலக்கு கொடுப்பனவுக்கு முறையான அனுமதி மற்றும் முறைமையொன்று காணப்படவில்லை.

(ஊ) வருடாந்த திரிபோஷா தேவையை பூர்த்தி செய்வதற்காக, உற்பத்திக்கு பயன்படுத்தக்கூடிய சோளம், சோயா, பால்மா, வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் போன்ற திட்டமிடப்பட்ட மூலப்பொருட்கள் முறையே 8927, 3862, 304, 09 மற்றும் 90 மெ.தொன் மற்றும் வருடத்தில் உற்பத்திக்காக வெளியிடப்பட்ட உண்மையான மூலப்பொருட்கள் முறையே 7,179, 2,432, 284, 08 மற்றும் 84 மில்லியன் மெ.தொனகளாகும். அதற்கமைய, வருடாந்த திரிபோஷா தேவையை பூர்த்தி செய்ய நன்கொடைகள் மற்றும் கொள்முதல் மூலம் போதுமான அளவு மூலப்பொருட்கள் பெறப்பட்ட போதிலும் அந்தத் தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்தோடு, சுபோஷா 1,822 மெ.தொன் உற்பத்திக்கு இந்த மூலப்பொருட்களைப் பயன்படுத்தப்பட்டிருப்பது தெரியவந்தது.

(எ) திரிபோஷ நிறுவனத்தின் சங்க யாப்பின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அமைப்பு 07 உறுப்பினர்களைக் கொண்டதுடன், அது சம்பந்தப்பட்ட துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், சுகாதார அமைச்சின் பிரதிநிதியாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்ட போதிலும், அவர் 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற 12 நிர்வாக சபைக் கூட்டங்களில் 8 இல் கலந்து கொள்ளவில்லை என்பதும், 2023 ஆம் ஆண்டில் நடைபெற்ற 10 பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் எதிலும் அவர் கலந்து கொள்ளவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

(ஏ) பணிப்பாளர் சபையின் அனுமதியின் அடிப்படையில், வைப்பு வட்டி வருமானம் மற்றும் கழிவு விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் ஆகியவற்றின் அடிப்படையில், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நிறுவனத்தின் ஊழியர்களுக்கு ரூ.15,390,730 ஊக்கத்தொகை செலுத்தப்பட்டது. அத்தோடு, திரிபோஷா உற்பத்தி செயல்பாட்டின் போது ஏற்படும் விலகல்கள் கழிவுகளாக விற்கப்படுகின்றன. மேலும் பெறப்பட்ட பணம் சுகாதார அமைச்சகத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும். எனினும் அது இந்த ஊக்கத்தொகையை செலுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டது. மேலும், ஊக்கத்தொகை செலுத்துவதற்கான முறையான முறை தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை. வருகை மற்றும் செயல்திறன் அடிப்படையில் இந்த ஊக்கத்தொகை ஒரு கொடுப்பனவாக பெயரிடப்பட்டாலும் இது வருகையைப் பற்றி மட்டுமே கருதப்பட்டது. மேலும் செயல்திறனை மதிப்பிடுவதற்கு எந்த முறைமையும் காணப்படவில்லை. மேலும், நிறுவனத்தின் சிரேட்ட அதிகாரிகளின் வருகை மற்றும் வெளியேறுகை தொடர்பாக நிறுவனத்தின் தற்போதைய விதிகள் மற்றும் விதிமுறைகள் பின்பற்றப்படாததால் வருகையின் அடிப்படையில் செய்யப்படும் இந்த கொடுப்பனவுகளின் செல்லுபடியாகும் தன்மை சிக்கலாக காணப்பட்டது.

(ஐ) ஊழியர்களை ஊக்குவிக்கும் முகமாக அனுமதிக்கப்பட்ட / அனுமதிக்கப்படாத சம்பளமற்ற லீவினைப் பெற்றுக்கொள்ளாத 162 ஊழியர்களுக்கு மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் தலா இரண்டு சம்பள ஏற்றங்கள் நிறுவனத்தின் தவிசாளரின் அனுமதியுடன் வழங்கப்பட்டது. அதற்கமைய,, சம்பள ஏற்றமாக மாதம் தோறும் ரூ.67,690 கூடுதலாக வழங்கப்பட்டது. இந்த முன்மாதிரி 2024 சம்பள உயர்வுகளிலும் பின்பற்றப்பட்டு, தலா இரண்டு சம்பள உயர்வுகள் வழங்கப்பட்டன.

(ஒ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2013 மார்ச் 28 ஆம் திகதிய இல.DMS/E4/13/08/413/1 கடிதத்தின் பிரகாரம், கம்பனி சார்பாக 2010 டிசம்பர் 02 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட அனைத்து பதவிகளுக்கும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 30 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு, தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவினார் பரிந்துரைக்கப்பட்டு ஆட்சேர்ப்பு நடைமுறை அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தத் திகதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட மூன்று புதிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை. மேலும், அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின்றி சில ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டிருப்பதும் தெரியவந்தது.

(ஓ) இரண்டாம் நிலையின் கீழ் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) பதவியில் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 16 ஆக காணப்பட்டது. ஆனால் உண்மையான பணியாளர்களின் எண்ணிக்கை 08 ஆக காணப்பட்டது. 08 பதவிகள் வெற்றிமாக இருந்தன. மேலும், மூன்றாம் நிலை பதவியான நிதி அதிகாரி பதவியும் 2021 ஆகஸ்ட் 01 ஆம் திகதி வெற்றிடமாக காணப்பட்டது. இந்த வெற்றிடங்களை நிரப்பவோ அல்லது பதவிகள் தேவைப்படாவிட்டால் பதவிகளை இரத்துச் செய்யவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ஔ) கம்பனியினால் 2016 ஆம் ஆண்டு நிர்வாக விதிகளின் நெறிமுறைகளை தயாரித்து பணிப்பாளர் சபையின் அனுமதி பெற்றிருந்த போதிலும், இதுவரை பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்படவில்லை. எனினும், அதில் உள்ள சில அங்கீகரிக்கப்படாத விதிகள் மற்றும் விதிமுறைகளை நிறுவனம் பின்பற்றி வருவது கணக்காய்வின் போது தெரியவந்தது.

(க) வாகனங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் பற்றிய பொருள் சுற்றாய்வு நடத்தப்பட வேண்டும் என்றாலும், 2023 ஆம் ஆண்டு தொடர்பாக அந்த நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக மேற்படி பொருள் சுற்றாய்வு நடத்தப்பட்டு, அதற்கான சுற்றாய்வு அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

டபிள்யு.பி.சி. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ත්‍රිපෝෂ
THRIPOSHA
திரிபோஷ

ත්‍රිපෝෂ නිවසින්
SUPOSHA
சுபோஷா
සුපෝෂ